திருவள்ளு
ஆண்டு 20
ஆடி
1974 ஜூ

அருளோசை

சமய பாட போதனைத் திங்களிதழ்



ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள்

இன்றோ திருவாடிப் பூரம்-எமக்காக
வன்றோ இங்காண்டா ளவதரித்தாள்—குன்றாத
வாழ்வான வைகுந்தவான் போகந்தன்னை யிகழ்ந்து
ஆழ்வார் திருமகளா ராய்.

தமிழ்நாடு தெய்விகப் பேரவை
9, மகாராஜா சூரியராவ் சாலை,
ன-600 018 தொலைபேசி : 76828

சிவனடியார் வரலாறு

பெருமிழலைக் குறும்ப நாயனார்

தமிழகத்தில் சேரநாட்டில் மிழலைநாடு என்னும் பகுதியில் வளஞ் சிறந்த பழவூர் பெருமிழலை. இது புதுக்கோட்டைக்கு வடக்கேயுள்ளது என்பர். அதன் அதிபர் குறும்பர்; அதாவது சிற்றரசர் மரபில் வந்தவர். எனவே, பெருமிழலைக் குறும்ப நாயனார் என்று பெயர் பெற்றார். அடியவர் குறிப்பறிந்து பணிசெய்து அமுதூட்டி ஆதரித்து வந்தார். சிவபெருமானை ஒருபோதும் மறவாத சிந்தையராய் ஒழுகினார்.

தேசமுய்யத் திருத்தொண்டத் தொகையருளிய நம்பியாரூரரை நித்தம் நியமமாக நினைந்து மனமொழி மெய்களால் சிந்தித்து வந்தித்து வணங்கி வந்தார். நாளும் நம்பிகளது திருநாமத்தை நவின்ற நலத்தினால், அட்டமா சித்திகளும் கைவரப்பெற்று, அதன்பின் அதுவே வழியாக அரன் அஞ்செழுத்தே தமக்குச் சுற்றமும் பற்றுக்கோடும் உணர்வும் ஆகும் என்னும் தெளிவும் பெற்றார்.

இங்ஙனம் ஒழுகி வருங்காலத்தில், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவஞ்சைக்களத்தப்பரைத் துதித்து, தமிழ்மாலைகள் மொழியத் திருவருளால், வடகயிலையைச் சேரும் வாழ்வுபெற நெஞ்சில் தெளிந்து கொண்டார். அவ்வாறு நம்பிகளது மனத்துள் நிகழ்ந்த நிகழ்ச்சியினை, இங்கு அப்படியே பெருமிழலைக் குறும்பர் ஞானத்தால் உணர்ந்து கொண்டு, "நம்பிகள் நாளைத் திருக்கயிலை செல்வர்; அவரைப் பிரிந்து வாழமாட்டேன்! ஆதலால் இன்றே யோகத்தால் கயிலை சென்றடைவேன்" என்று துணிந்தனர். தாம் பயின்ற யோக முயற்சியினால் பிரமநாடிவழிப் பிராணவாயுவை மேற்செலுத்த, பிரணவத்தால் திறக்கப்பட்ட கபால நடுவாயிலின் மூலம் சிவன் 'திருப்பாதங்களை நம்பிகள் செல்லும் முன்பே சென்றடைந்து சிறப்புற்றார். பேரையூரின் மேற்கேயுள்ள தேவமலையில் உள்ள குடவரையில் சிவலிங்கத் திருவுருவின் முன், யோகநிலையில் அமர்ந்த சடைமுடியுடைய முனிவர் உருவம் குறும்ப நாயனார் திருவுருவம் என்று கருதப்படுகின்றது.

தமிழ்ச்செல்வர்.
ரா. சு. இராமலிங்கம்.

ஆனந்த ஆண்டு ஆடித் திங்கள் 9-ஆம் நாள் (25-7-74) வியாழன் பெருமிழலைக் குறும்ப நாயனார் திருநட்சத்திரம்-சித்திரை.

அருளோசை

திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மணி 3	ஆனந்த ஆடி 1974 ஜூலை	ஓசை 1

அருளோசை அன்பர்களுக்கு, வணக்கம்.

'அருளோசை'க்கு இந்த இதழிலிருந்து மூன்ருவது ஆண்டு பிறக்கிறது. பத்திமைச் சுவையும், இலக்கியச் சுவையும் குன்ருமல் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பத்திரிகையைப் படிப்படியாக வளர்ச்சி காணச் செய்துள்ளோம். தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கும், தமிழ்ச் சமூகத்திற்கும் பயன்படத்தக்க பல நல்ல பணிகளைச் செய்துள்ளோம் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். எதிர்காலத்திலும் பல நல்ல பணிகளைச் செய்திடத் திட்டம் வகுத்துள்ளோம்.

மூன்ருவது ஆண்டு பிறக்கும் இந்த நல்ல நேரத்தில் நமது அன்பர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள் விடுக்க விரும்புகிருேம். ஆம்; நமது சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்வதோடு, தங்களுடைய நண்பர்களையும் சந்தாதாரர்களாகச் சேர்க்கவேண்டும் என்பதே எங்கள் பணிவார்ந்த வேண்டுகோள்.

காகிதக் கட்டுப்பாடும், தட்டுப்பாடும் உள்ள இந்த நேரத்தில்-அச்சிடுதற்கான மூலப்பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் ஏறிவிட்ட நேரத்தில்-கூடுமானவரையில் பக்க அளவைக் குறைக்காமல்-அதே நேரத்தில் தரத்தையும் குறைக்காமல் 'அருளோசை' வெளிவருகின்ற தென்ருல் தங்களுடைய உற்சாகமான வரவேற்புதான் காரணம் என்பதை மீண்டும் மீண்டும் நினைவுகூர்வதோடு, தங்களுக்கு நன்றியையும் தெரிவித்துக்கொள்கிருேம்.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

இந்த இதழில்

1.	திருநீலகண்டம்	3
2.	அறிவை அமைக்கும் முறை-வள்ளுவர் வழியில்	9
3.	இராமாநுசர்	15
4.	ஸ்ரீ ஆண்டாள்	20
5.	சேக்கிழார் புராணம்	21
6.	திருமந்திரம்	25
7.	விஞக்கள்	27

"அருளோசை"

விஞ விடைப் பகுதி-ஜூன்-74

பரிசு பெற்றவர்கள்

முதல் பரிசு : திரு. கி. சுப்பராமன், சென்னை-1, சந்தா எண். 846.

இரண்டாம் பரிசு : திரு. வீரா. பாலசுப்பிரமணியன், நாரணமங்கலம், திருச்சி மாவட்டம், சந்தா எண். ப. 12.

மூன்றும் பரிசு : திரு. ஏ. எச். இராசகோபாலன், பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம், சந்தா எண். 217.

நான்காம் பரிசு : திரு. பொ. இரா. கண்ணன், லால்குடி, திருச்சி மாவட்டம், சந்தா எண். 2200.



திருநீலகண்டம்

புலவர் திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

முன்னுரை :

சிவபெருமான் மேற்கொண்டருளிய திருவுருவங்கள் பலவற்றுள், திருநீலகண்டத் திருவுருவம் என்பது ஒன்று. சிவபெருமானின் திருவுருவங்களில் இது மிகமிகச் சிறப்புடையதொன்ருகும். இத்திருவுருவம், சிவபெருமானின் பேரருட் பெருந் தகைமையினைப் பெரிதும் விளக்குவதாகத் திகழ்கின்றது. ஆதலின் இதனைப் பெரிதும் போற்றிப் புகழ்ந்து, சைவசமய ஆசிரியர்கள் அனைவரும், திருமுறைகளிலும், சித்தாந்த சாத்திரங்களிலும் மற்றும் பல சைவ இலக்கியங்களிலும் விதந்து வியந்து துதித்துப் பாடியுள்ளனர்.

நாயன்மார்கள் :

திருநீலகண்டம் எனப் புகழ்ந்து போற்றப்பெறும் இத்திருவுருவின் சிறப்பினைப் பெரிதும் விதந்து போற்றியே, திருஞானசம்பந்தர் திருநீலகண்டத் திருப்பதிகம் பாடினர்.

“ அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர் !
உய்வினை நாடாது இருப்பதும் உந்தமக்கு ஊனம்அன்றே?
கைவினை செய்துஎம் பிரான்கழல் போற்றுதும் நாம் அடியோம் !
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெரு திருநீலகண்டம் !”

—சேக்கிழார்.

“ அவ்வினைக்கு இவ்வினை என்றெடுத்து ஐயர் அமுது செய்த
வெவ்விடம் முன்தடுத்து எம்இடர் நீக்கிய வெற்றியினுல்,
எவ்விடத்தும் அடியார்இடர் காப்பது கண்டம் என்றே
செய்வினை தீண்டா திருநீலகண்டம் ! எனச் செப்பினர் ”

திருநீலகண்டர் என்னும் திருப்பெயரைப் பலகாலும் அன்புடன் பயின்று ஓதிவந்த பக்திமையால், திருநீலகண்டர் எனவே ஒரு நாயனர் பெயர் வழங்கப்பெற்ருர். சைவநாயன்மார்கள் அறுபான்மூவரில், திருநீலகண்டர் (யாழ்ப்பாணர்) என வேறு ஒருவரும் பெயர் பெற்றிருந்தமை கருதற்பாலது.

“ புவனங்கள் உய்ய, ஐயர் பொங்கும் நஞ்சுண்ண, யாம்செய்
தவம்நின்று தடுத்த தென்னத் தகைந்துதான் தரித்த தென்று
சிவன்எந்தை கண்டம் தன்னைத் திருநீலகண்டம் என்பார் ”

—சேக்கிழார்.

வரலாறு :

முன்னொரு காலத்தில் தேவர்களும், அசுரர்களும் தம்முள் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போரிட்டு வந்தனர். அங்ஙனம் போர் நிகழுங் காலங்களிலெல்லாம் தேவர்களிலும் அசுரர்களிலும் பற்பலர் இறந்தொழிந்தனர். அதனால் தேவர்களும் அசுரர்களும் தாம் இறவாமல் நெடுங்காலம் இருத்தல் வேண்டும் என விரும்பினர். அதற்காகப் பிரமதேவனை அணுகிப் பெரிதும் துதித்து வேண்டினர். அதற்குப் பிரமதேவன் நீங்கள் திருமாலை அடைந்து அவர்தம் உதவியைப் பெற்றுத் திருப்பாற்கடலைக் கடைந்தால், அதிலிருந்து இறவாமையைத் தரக்கூடிய அமிர்தம் வெளிப்படும். அதனை உண்டால் நீங்கள் நெடுங் காலம் இருக்கலாம் என்றார். அதன்படியே அவர்கள் திருமாலைச் சென்றடைந்து, அவர்தம் அருளைப்பெற்று மந்தரமலையை மத்தாகவும், சந்திரனைக் கடைதறியாகவும், வாசுகியைக் கயிறாகவும் கொண்டு, அக் கயிற்றின் ஒருபுறத்தைத் தேவர்களும், மற்றொருபுறத்தை அசுரர்களும் பற்றிக்கொண்டு, திருப்பாற்கடலைக் கடைய முற்பட்டனர். அப்போது திருமால் ஆமை வடிவம் கொண்டு, மந்தரமலையாகிய மத்து நிலைகுலையாதபடி தமது முதுகினாலும் கைகளினாலும் தாங்கினர். இங்ஙனம் நெடுங்காலம் கடைந்ததனால் பாற்கடல் பொங்கித் ததும்பி, உலகங்கள் நிலை குலைந்தன. தேவர்கள் வலி குன்றினர். மலைகள் சலித்தன. எண்திசை யானைகள் அஞ்சிக் கதறின. கயிறாக அமைந்த வாசுகி என்னும் பாம்பு உடல்வலி பொறுக்கமாட்டாமல் வெய்துயிர்த்து, மெய் பதைத்து வெஞ்சினங்கொண்டு தனது ஆயிரம் வாய்களினின்றும் ஆலாலம் என்னும் நஞ்சினைக் கக்கிற்று. அவ்வமயம் பாற்கடலும் பொங்கிக் கொடிய நஞ்சினை உமிழ்ந்தது. அஃது உருண்டு திரண்டு சூல்கொண்ட மேகத்திரள்கள் போலக் கறுத்து இருண்டு, உலகிலுள்ள உயிர்களெல்லாம் தாங்க முடியாமல் மயங்கி வீழ்ந்து அழிந்து போகும் படி, எங்கணும் பரவத் தொடங்கியது.

ஆலாலம் என்னும் அந்நஞ்சின் கொடுமையும், வெப்பமும் தாங்க மாட்டாமல், தேவர்களும், அசுரர்களும், பிரமனும், திருமாலும் ஆகிய அனைவரும் ஆங்காங்கே பலவகைகளில் பதறிச் சிதறி ஓடி ஒளிய முற்பட்டனர். அந்நிலையில் அவர்கள் அனைவரும் திருக்கயிலாயம் அடைந்து, தம்மையெல்லாம் காத்தருளும்படி சிவபெருமானிடம் முறை யிட்டுக் கொண்டு அடைக்கலம் புகுந்தனர். அவர்கள்பால் இரக்கம் கொண்டருளிய சிவபெருமான் தமது அணுக்கத் தொண்டராகிய சுந்தரரை அனுப்பி அந்நஞ்சினைத் திரட்டி உருட்டி எடுத்துவரும்படி பணித்தருளினர். அதன்படியே சுந்தரர் சிவபெருமானின் திருவருட் டுணை கொண்டு, ஆலாலம் என்னும் அக்கொடிய நஞ்சினை ஒரு சிறிய திவலை (துளி) போல் திரட்டிக் கொண்டு வந்து சிவபிரானிடம் கொடுத்தார். அந்நஞ்சினை வெளியில் எங்கேனும் விடில், உலக உயிர்களுக்குப் பெருந்தீங்கு விளைவிக்கும் ஆதலின், அக்கொடிய நஞ்சினை, அமிழ்தம் போலக் கருதிச் சிவபிரான் அதனைத் தம் திருவாயிலிட்டு உட்கொண் டருளினர். அஃது அவர்தம் திருமிடற்றிற் சென்றது. அதனை யாவரும் நோக்கி, எம்பெருமானே இன்று எங்கள் உயிரையெல்லாம் காத்தருளி யதற்குச் சான்றாகவும் தங்களது பேரருட் பெருங்கருணைத் திறனை விளக்கும் எடுத்துக்காட்டாகவும் அமையும்படி, இந்நஞ்சினைத் தாங்கள் தங்கள் திருக்கண்டத்திலேயே தங்கி நிற்கும்படி அருள்செய்க என்று துதித்து வேண்டிக் கொண்டனர். அதன்படியே சிவபெருமான் தம்முடைய அழகிய திருமிடற்றில், ஒரு நீலமணிபோல விளங்கும்படி

அந்நஞ்சினை நிலைநிறுத்திக் கொண்டருளினர். அதனல் சிவபெருமானுக்குத் திருநீலகண்டம் என்பது, அவர்தம் சிறப்பு அடையாளங்களில் ஒன்ருயிற்று.

சங்க கால இலக்கியங்கள் :

சிவபெருமான் ஆலாலம் என்னும் நஞ்சினை உண்டருளியதும், அந்நஞ்சு அவர்தம் கண்டத்தில் தங்கித் திருநீலகண்டம் எனத் திகழப் பெற்றதும் ஆகிய செயல்கள், ஏறத்தாழ இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பண்டைச் சங்க கால இலக்கியங்களிலும் பெரிதும் புகழ்ந்து போற்றப்பட்டுள்ளன.

"கறைமிடறு அணியலும் அணிந்தன்று, அக்கறை
மறைநவில் அந்தணர் நவிலவும் படுமே"

—புறநானூறு.

"விண்ணேர் அமுதுண்டும் சாவ, ஒருவரும்
உண்ணுத நஞ்சுண்டு இருந்தருள் செய்குவாய்"

— சிலப்பதிகாரம்.

"நீரகம் பனிக்கும் அஞ்சுவரு கடுந்திறற்
பேரிசை நவிரம் மேஎய் உறையும்
காரி யுண்டிக் கடவுளது இயற்கை"

—மலைபடுகடாம்.

சேக்கிழார் :

சிவபெருமான், ஒருவரும் உண்ணுத கொடிய ஆலாலம் என்னும் நஞ்சினையுண்டு ஒரு தீங்கும் இன்றித் திகழ்ந்து, உலகுக்கு நலம் புரிந்தருளிய ஒப்பரிய சிறப்பினைத் தமது பெரிய புராணத்தில், தக்கதோர் இடத்தில் நினைவுகூர்ந்து, நமக்கும் நினைவூட்டுகின்ருர். திருநாவுக்கரசர் சமண் சமயம் விடுத்துச் சைவசமயம் சார்ந்தமைக்காக மகேந்திர வர்ம பல்லவன் (கி.பி. 600-638), தனது சமண்சமயக் குருமார்கள் பணித்தபடி, அவருக்குப் பலவகையான தண்டனைகளைத் தருகின்ருன். அதன்படி சமணர்கள் திருநாவுக்கரசருக்குப் பாற்சோற்றில் நஞ்சு கலந்து கொடுத்து உண்பித்தனர். நஞ்சுண்டு உலகுக்கு நலம் புரிந்த நம் சிவபெருமானின் திருவருள் துணையிருக்கும்போது, இந்த நஞ்சு நம்மை என்ன செய்யக்கூடும்? எனத் தெளிந்த உள்ளத்தினராய்த் திருநாவுக்கரசர் பெருமான், அவ் வஞ்சனைப் பாற்சோற்று நஞ்சினை வாங்கி உண்டார். அஃது அவருக்கு யாதொரு தீங்கும் செய்திலது.

"வஞ்சனைப் பாற்சோ ருக்கி
வழக்கிலா அமணர் தந்த
நஞ்சு அமுதாக்கு வித்தார்
நனிபள்ளி அடிக ளாரே"

என்பது திருநாவுக்கரசர் அருளிய தேவாரப்பாடல்!

சிறந்த நல்ல தவப்பயிற்சியினல், நஞ்சையும் அமுதமாக்கி உண்டு, யாதொரு தீங்கும் இன்றி இருத்தல் கூடும் என்று அரவிந்த அடிகளார்

குறிப்பிட்டிருத்தலும், இங்கு நாம் இயைபுடைமை பற்றி உணர்ந்து இன்புறலாம்.*

"நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியார்க்கு என்று
வஞ்சமிகு நெஞ்சுடையார் வஞ்சனையாம் படியறிந்தே
செஞ்சடையார் சீர்விளக்கும் திறலுடையார், தீவிடத்தால்
வெஞ்சமணர் இடுவித்த பாலடிசில் மிசைந்திருந்தார்."

"கொடியார்க்கும் திருமேனிப் புனிதற்குப் புவனங்கள்
முடிவாக்கும் துயர்நீங்க முன்னைவிடம் அமுதானால்
படியார்க்கும் அறிவரிய பசுபதியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சு அமுதம் ஆவதுதான் அற்புதமோ!"

—பெரியபுராணம்

அவ்வையார் :

சிவபெருமானின் திருநீலகண்டத் திருவுருவம் சங்ககாலத்திலேயே தமிழ் மக்களிடையிற் பெரிதும் சிறப்பாகப் போற்றப்பெற்று வந்தது. சங்ககாலப் புலவர் பெருமக்களுள் தலைசிறந்த ஒருவராகத் திகழ்ந்திருந்த செவ்விய புலமைச் செல்வியார் ஆகிய அவ்வைபிராட்டியார், தமக்கு அதிகமான் அஞ்சி என்னும் சங்ககால வள்ளல், நெடுநாள் இறவாமல் வாழ்ந்திருக்கும் பேற்றைத் தரக்கூடிய அருநெல்லிக்கனி ஒன்றினை யளித்து உண்ணச் செய்தபோது, அவனது தன்னலமற்ற பெருந்தகைமைப் பண்பினை வியந்து, நீ நீடுழிகாலம் நலம்மிக இனிது வாழ்க என வாழ்த்துகின்றார். அங்ஙனம் வாழ்த்துங்கால், 'நீல மணி மிடற்று ஒருவன்' ஆகிய சிவபெருமான் போல வாழ்க என வாழ்த்துகின்றார்.

"வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்
களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்!
போர்அடு திருவிற் பொலந்தார் அஞ்சி
பால்புரை பிறைநுதற்பொலிந்த சென்னி
நீல மணி மிடற்று ஒருவன்போல,
மன்னுக பெரும நீயே! தொன்னிலைப்
பெருமலை விடர்அகத்து அருமிசைக் கொண்ட

---

* There is the Dravyaguna, the particular nature of the food, as well as fixed ideas in our beings. But the removal of the idea from the mind alone does not free you from it. You must become conscious of the same idea in your vital being and remove it from there as well. The vital vital also has strong likes and dislikes like that.

I have removed all such fixed ideas from my being down to the physico-vital and can now take any food, whether hot, cold or spiced, good or bad; I can now take the essential rasa out of any and every kind of food.

In my case, this desire for and antipathy to certain kinds of food is still there in the atoms of my physical being. If that can be removed, then it may be possible that even a cup of poison will not affect."

—*Sri Aurobindo,*
Reminiscences & Anecdotes of Sri Aurobindo.

சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது,
ஆதல்நின் அகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்குஈத் தனையே"

என்பது புகழ்மிக்க புறநானூற்றுப் பாடல்களுள் ஒன்று. சாதற்குக் காரணமாகிய நஞ்சுண்டும், சிவபெருமான் சாவாது நிலைபெற்றிருந்தாற் போல, நீயும் சாவாது நிலைபெற்று நீடினிது வாழ்க என்பது, இப்பாடலின் கருத்து. நீலமணிமிடற்று ஒருவனாகிய சிவபெருமானை நினைந்து வழிபட்டு வந்தால், இறவாத பெருவாழ்வை நாம் இனிது எய்தலாம் என்னும் உண்மையும், இதனால் அறியப்படும்.

பிற்கால நூல்கள் :

சங்க இலக்கியங்களிலும், சைவத் திருமுறைகளிலும் மட்டுமேயன்றி, வேறு பிற சமய நூல்களிலும் சிவபிரானின் நஞ்சுண்ட செயலும், திருநீலகண்டத்தின் சிறப்பும் பெரிதும் புகழப்பட்டுள்ளன.

"பஞ்செனச் சிவக்கும் மென்கால் தேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக்கு இளைய என்னை வருகஎன் றருள்செய் தானோ?
தஞ்செனக் கருதி னானோ? தாழ்சடைக் கடவுள் உண்ட
நஞ்செனத் தகையன் அன்றோ, நாயகன் அருளின் நாயேன்"

—கம்பர்.

விடமும் வந்து ஈசன் கோல மிடற்றினில் நீலவண்ண
வடிவுபெற் றணிய தாகி வயங்கிற்றுப் பெரிதும் என்றால்,
கொடியரும் பெருமை யோரைக் கூடின்வெங்கோது நீங்கி
ஒடிவறு நலம்பெற் றுய்தல் உரைப்பதென் உலகின் அம்மா?

—சூளாமணி.

குமரகுருபரர் :

சிவபெருமான் நஞ்சுண்டு தேவர்களையும் பிறரையும் காத்தருளிய செயலைப் பிற்காலச் சான்றோர்கள் பலவகைகளில் சுவைபெறப் பாடியுள்ளனர். சிவபெருமான் நஞ்சுண்டதனால்தான், தேவமாதர்கள் தம்முடைய காதுகளில் காதோலை அணிந்துகொண்டு சுமங்கலிகளாக விளங்குகின்றனர்; இல்லையேல் தம் கணவன்மார்களாகிய தேவர்கள் இறந்துபோக, தேவப்பெண்கள் தம் காதோலைகளை இழந்து அமங்கலிகள் ஆகியிருப்பர். எனவே சிவபெருமான் "தேவர்தம் பாவையர்க்கு அன்று காதோலை பாலித்த தயவாளர் ஆவார்" என்று குமரகுருபரர் தமது மதுரைக் கலம்பகத்தில் பாடுகின்றார். மேலும் அவர், சிவபெருமான் ஆலாலம் என்னும் நஞ்சினை உண்ணாமலும், அவர்தம் கண்டம் நீலநிறம் ஆகாமலும் இருந்திருந்தால், தேவர்கள் அனைவரும் இறந்து அழிந்து போயிருப்பார்கள். அதனால் தம் கணவன்மாரை இழந்த தேவமாதர்கள் தம் கைகளால் மார்பில் அடித்துக்கொண்டு அழுது புலம்பியிருப்பார்கள். அப்போது அவர்களின் செங்கைகளும் கொங்கைகளும் சிவந்துபோயிருக்கும். அங்ஙனம் சிவந்து போகாமல் இருப்பதற்காகவே, சிவபெருமான் அக்கொடிய நஞ்சினை உண்டு, தமது கண்டத்தினை நீலநிறம் ஆக்கிக்கொண்டு அருளினார் என்றும் அழகுறப் பாடியிருக்கின்றார்.

காளமேகப் புலவர் :

இக்கருத்தினையே வேறொரு வகையில் காளமேகப் புலவர் கற்பனைச் சுவைநலம் பொலியத் தமது தனிப்பாடல் ஒன்றில் இனிப்பாகப் பாடியிருக்கிறார். ஒருசமயம் காளமேகப் புலவர் ஆலங்குடி என்னும் ஊருக்குச் சென்றார். அங்குச் சிவாலயத்தினுள் சென்று, இங்குள்ள இறை

வனின் பெயர் யாது என்று அருகிலிருந்தாரை வினவினர். அவர்கள் அதற்கு ஆலங்குடியில் இருப்பதனல் இவருக்கு ஆலங்குடியான் என்பது பெயர் எனக் கூறினர். அதுகேட்ட காளமேகப் புலவர் இங்குள்ள சிவபெருமானுக்கு ஆலங்குடியான் என்பதா பெயர்? சிவபெருமான் ஆலம் குடித்திருக்காவிட்டால் மண்ணுலகமும் விண்ணுலகமும் தேவர்களும் யாவர்களும் அழிந்தொழிந்திருக்க நேருமே? இங்ஙனம் அழிந்தொழிந்து போகாதபடி எல்லோரையும் காத்தருளுவதற்காக ஆலம் குடித்தருளிய பெருமானை, ஆலங்குடியான் என்று சொல்வது எவ்வாறு பொருந்தும்? என்னும் கருத்தமைய அழகாகப் பாடி, இறைவனின் பெருங் கருணைத் திறத்தினை இனிது விளக்கியருளினர்.

"ஆலங் குடியானை ஆலாலம் உண்டானை
ஆலங் குடியான்என்று ஆர்சொன்னர்?—ஆலம்
குடியானேல் வானும் குவலயமும் எல்லாம்
மடியாவோ முற்றிருங்கு மாய்ந்து"

என்பது காளமேகப் புலவரின் கவிநலம் சான்ற தனிப்பாடலாகும். இராமலிங்க அடிகளும், "மால் எங்கே? வேதன் உயர் வாழ்வெங்கே? இந்திரன் செங்கோல் எங்கே? வானோர் கடி எங்கே? கோலஞ்சேர் அண்டம் எங்கே? அவ்வவ் அரும்பொருள் எங்கே? நினது கண்டம் அங்கே நீலம் உருக்கால்?" என்று தமது திருவருட்பாவில் பாடியிருத்தல் போல்வன, இங்கு நாம் இயைபுடைமை பற்றி அறிந்து இன்புறத் தக்கனவாகும்.

முடிவுரை :

இவ்வுலகில் உள்ள மக்களை தலையாயர், இடையாயர், கடையாயர் என மூவகையினராகப் பிரிக்கலாம். பிறரைத் துன்புறுத்தித் தாமே வாழ விரும்புபவர்கள் கடையாயவர்; பிறரும் வாழ்க நாமும் வாழ்வோம் என்றிருப்பவர்கள் இடையாயர்; தம்மை அழித்துக் கொண்டேனும் பிறரை வாழ்விக்க முயல்பவர்கள் தலையாயவர்கள். இங்ஙனம் தமக்கென வாழாமல் பிறர்க்கெனவே வாழ்ந்து வருபவர்கள், மன்னுயிர்களின் இன்பநலங் கருதித் தாம் எத்துணைத் துன்பங்களையும் ஏற்றுக்கொள்வர். 'அளவிலா அன்பு அளவிலாத் துன்பு' என்பதற்கு, அவர்களின் தூய சிறந்த வாழ்வு மேலான எடுத்துக்காட்டாக விளங்கும்.† இவ்வியல்பினையும் உண்மையினையும் தெள்ளிதின் அறிவுறுப்பதே, சிவபெருமானின் திருநீலகண்டத் திருவுருவம் ஆகும்.

"பெயக் கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்"

என்னும் திருவள்ளுவரின் திருக்குறளுக்குச் சிறந்துயர்ந்த இலக்கியமாகத் திகழ்வது, சிவபிரானின் திருநீலகண்டத் திருவுருவமே எனலாம். இத்தகைய சிறப்புமிக்க திருவுருவிற் சிவபெருமானை வணங்கி வழிபடுவதன் மூலம், நாமும் நயத்தக்க நாகரிக நல்வாழ்வின் பயனைப் பெற்றுய்ய முயல்வோமாக.

"† Suffering rinses our spirit clean. According to Hindu mythology, the God Siva undertakes Himself to swallow the poison which comes up when the ocean is churned. The God of the Christians gave His son in order to save mankind. Even if they did not express some deep-seated intuitions in men. The more you love, the more you suffer. In finite love is suffering..."

—*Dr. S. Radhakrishnan,*
Religion as Life in God.



மெய்ப்பொருள் காண்பது அறிவு

அறிவை அமைக்கும் முறை-வள்ளுவர் வழியில்

டாக்டர் வித்துவான் திரு. வை. இரத்தினசபாபதி, எம்.ஏ., பி.ஓ.எல்., பிஎச் டி.,

முன்னுரை :

திருவள்ளுவர் அடிச்சுவட்டில் நின்று அறிவை அமைத்துக் கொள்ளும் முறை பற்றிய நான்காவது கட்டுரை இது.

செய்திகள் வேறு; அறிவு வேறு. செய்திகள் எல்லாம் அறிவு என அமையமாட்டா. ஆனால், அறிவு செய்தி ஆகும். செய்திகளை எவ்வாறு அறிவாக அமைக்கவேண்டும் என்பது முதற்கட்டுரையின் செய்தி.

நேர்முகத் துய்ப்பு என்றும் செவிவழித் துய்ப்பு என்றும் இருவகைத் துய்ப்பு முறைகள் உள. பொருளுக்கும் பண்புக்கும் உள்ள தொடர்பை நேர்முகத் துய்ப்பின் மூலமாகவும், பொருளுக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பைச் செவிவழித் துய்ப்பின் மூலமாகவும் அறிய முடிகிறது. இவ்விருவகை முறைகளையும் உளங்கொண்ட திருவள்ளுவர் நேர்முகத் துய்ப்பின் மூலம் அறிவை அமைக்கும் முறையை அறத்துப்பால், மெய்யுணர்தல் என்ற அதிகாரத்திலும், செவிவழித் துய்ப்பின் மூலம் அறிவை அமைக்கும் முறையைப் பொருட்பால் அறிவுடைமை என்ற அதிகாரத்திலும் வேறுபட அமைத்துக் காட்டுகிறார். இது இரண்டாம் கட்டுரைச் செய்தி.

'மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்ற திருவள்ளுவர் வாக்கில் 'மெய்மை' என்ற அடைமொழிச் சொல்லால் திருவள்ளுவர் உணர்த்தும் பொதுப்பொருள் பற்றிய விளக்கத்தை எடுத்துக்காட்டியது மூன்றாங் கட்டுரை.

'மெய்ப்பொருள்' என்பதில் 'மெய்மை' என்ற அடைமொழிச் சொல்லால் உணர்த்தப்பெறும் சிறப்புப்பொருளை விளக்க முற்படுவதே இந் நான்காம் கட்டுரையின் நோக்கம்.

பொருளியல் மெய்மையும் அமைப்பியல் மெய்மையும் :

மூன்றாங் கட்டுரையில் பொருளியல் மெய்மை (Truth) பற்றியும், அமைப்பியல் மெய்மை (Validity) பற்றியும் விரிவான விளக்கங்களைக் காணலாம்.

பொருளியல் மெய்மையைத் திருவள்ளுவர் 'மெய்யுணர்தல்' என்ற அதிகாரத்தில்,

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்ற திருக்குறளாலும்,

அமைப்பியல் மெய்மையைத் திருவள்ளுவர் "அறிவுடைமை" என்ற அதிகாரத்தில்,

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்ற திருக்குறளாலும் உணர்த்துகிறார்.

பொருளியல் மெய்மை என்பது பொருளுக்கும் பொருள் தன்மைக்கும் உள்ள உறவை நேர்முகத் துய்ப்பின் மூலம் நுகர்ந்து அறிவை அமைப்பது என்றும், அமைப்பியல் மெய்மை என்பது பொருளுக்கும் பொருளுக்கும் உள்ள உறவைச் செவிவழித் துய்ப்பின் மூலம் கேட்டு அறிவை அமைப்பது என்றும் பிரிவுபடுத்தி மனத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும்.

சுருங்கக் கூறின் 'பொருளியல் மெய்மை' என்பதைப் பண்பாராய்ச்சி என்றும் 'அமைப்பியல் மெய்மை' என்பதைப் பொருளாராய்ச்சி என்றும் அமைத்துக் கொள்வது நம் சிந்தனை ஓட்டத்துக்குச் சரியான பாதை வகுப்பது போல்வதாகும்.

மேலே எழுதப்பெற்ற இருவகை மெய்மைகளைச் சில எடுத்துக் காட்டுக்களின் மூலம் தெளிய விளங்கிக் கொள்ளலாம்.

அனுமன் இலங்கையிற் சிறையிருந்த சீதையைக் கண்டு மீண்டவுடன் இராமபிரானிடம் எடுத்துக் கூறும் நிகழ்ச்சியை மனத்திற் கொள்க

விற்பெருந் தடக்கை வீர !
வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்த ளாய
நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப்பு என்பது ஒன்றும்
இரும்பொறை என்பது ஒன்றும்
கற்பெனும் பெயரது ஒன்றும்
களிநடம் புரியக் கண்டேன்.

என்பது கம்பர் வாக்கு. இங்கே அனுமன் பொருளைப் பண்பாகக் காண்கிறான். தெளிவாகக் கூறவேண்டுமானால் பொருளை மறுத்துப் பண்பைக் கூறுகிறான். 'நங்கையைக் கண்டேன் அல்லேன்' என்று பொருளைப் பொருளாகக் காணும் முறையை மறுத்துரைக்கிறான். இற்பிறப்பு, பொறுமை, கற்பு என்ற மூன்று பண்புகளின் இணைந்த கூட்டமைப்பாகக் காண்கிறான். இவ்வகைக் காட்சியே பொருளுக்கும் பண்புக்கும் இணைந்த இணைப்பைக் காணும்-காட்டும் முறையாகக் கம்பர் அனுமன் மூலம் அமைத்துக் கொடுக்கிறார்.

இவ்வாறு கண்ட அனுமனே இனச்சார்புப் பற்றி, பொருளுக்கும் பொருளுக்கும் உள்ள இயைபை வெளிப்படுத்தும் முறைமை பற்றி, 'அமைப்பியல் மெய்மை' என்பதன் அடிப்படையில் சீதையைக் கண்டதாகவும் கூறுவதைக் கீழ் உள்ள செய்யுளாற் காணலாம்.

உன்பெருந் தேவி என்னும்
உரிமைக்கும் உன்னைப் பெற்ற
மன்பெரு மருகி என்னும்
வாய்மைக்கும் மிதிலை மன்னன்
தன்பெருந் தனயை என்னும்
தகைமைக்கும் தலைமை சான்றாள்
என்பெருந் தெய்வம் ஐயா
இன்னமும் கேட்டி என்றான்.

இச்செய்யுளில் உரிமை, வாய்மை, தகைமை என்ற பண்புகள் பேசப் பெறுகின்றன. ஆனால் இராமனுடைய மனைவி, தசரதனுடைய மருமகள், ஜனகனுடைய மகள் என்ற பொருளிணைப்புக்களை வைத்துத் தான் உரை காண வேண்டும் என்ற வரையறையை அமைத்து விடுகிறான்.

அமைப்பியல் மெய்மையை வேறு சில எடுத்துக்காட்டுக்களாலும் விளங்கிக் கொள்ளலாம். சில மருந்துத் தயாரிப்பு நிறுவனங்களின் நேர்முக விளக்க, விற்பனைப் பணியாளர்கள் ஒரு நகரத்துக்கு வந்த வுடன், 'இந்நகரத்தில் அதிகப் பொருட் செலவில் தங்குவதற்குரிய விடுதி எது?' என்று கேட்பார்கள். அத்தகைய இணைப்பின் மூலம் அந்நிறு வனம் தனக்கென ஒரு பெருமையை அமைத்துக் கொள்ளுகிறது. எழுத்தாளனுங்கூட அப்படித்தான். தெய்விகப் பேரவைத் தொடர் பான 'அருளோசை'யில் என்னை எழுத்தாளனாக அமைத்துக் கொள் ளும்போது நிறுவனத்தின் பெருமைக்குக் குறைபாடின்றி எழுத வேண்டிய கடப்பாடு அமைந்து விடுகிறது. இவைகளையெல்லாம் சான்றுகளாகக் கொண்டு "அமைப்பியல் மெய்மையை" அறியலாம்.

இருவகை மெய்மைகளுக்கும் உள்ள வேறுபாடு :

பொருளியல் மெய்மைக்கும் அமைப்பியல் மெய்மைக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு ஒன்று உண்டு.

பொருளியல் மெய்மையில் கிடைத்த அறிவு மாறாதது. அமைப்பியல் மெய்மையிற் கிடைத்த அறிவு மாற்றம் பெறும்.

பொருளியல் மெய்மையிற் கிடைத்த அறிவை உணர்தல் என்ற சொல்லாற் கூறி அது அனுபவம் எனப் பறைசாற்றி, அதன் மெய்மைத் தன்மை வரையறுக்கப் பெற்றது என முடிவு கட்டுகிறார் திருவள்ளுவர்.

ஆனால் அமைப்பியல் மெய்மையால் வரும் அறிவை 'உடைமை' என்ற சொல்லாற் குறிப்பிடுகிறார். (1) உடைமை உடையானை விட வேறானது. (2) உடையானுக்குத் தேவை இருக்கும் வரையில்தான் உடைமைக்கு மதிப்பு உண்டு. (3) உடையானின் விருப்பு வெறுப்புக் களுக்கு ஏற்ப உடைமையில் ஏற்றத் தாழ்வுகள் காணப்பெறும். (4) உடையான் விரும்பினால் உடைமையை வேறொருவன் அனுபவிப்புக்குக் கொடுத்துவிடவும் முடியும்.

மாறுந்தன்மை உடையது இது ஆகையால் இதனை எப்படி எப்படி வரையறைப்படுத்த வேண்டும் என்றெல்லாம் விதிகள் அமைத்துக் காட்டுகிறார். இனத்தியல்பது ஆகும் அறிவு என்றும், சான்றோர்களை-

பெரியோர்களைத் துணைகொண்டு அறிவை அமைத்துக் கொள்ள வேண்டும் என்றும், கற்றுக் கற்றுத்தேற வேண்டும் என்றும், கற்றிலனு யினுங் கேட்க என்றும் அமைக்கின்றார்.

"பொருளியல் மெய்மை" பற்றிய அறிவை மிக நுட்பமாக விரித்துரைக் கும் திருக்குறட்பாக்களையும் காணலாம். அவற்றுள் ஒன்று

உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு.

இக்குறட்பாவினால் பொருளியல் மெய்மை பற்றிய அறிவானது மாறாத பண்புடையது என்றும் ஒருபடித்தான நிலையுடையது என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

இவ்விருவகை வேறுபாட்டறிவைக் கம்பநாடர் சொல்லோவியமாக அமைத்துக் காட்டுகிறார்.

கைகேயி "இந்நாட்டாட்சி உனக்கில்லை; உன் தம்பி பரதனுக்கே; நீ காட்டுக்குச் செல்" என்று கூறிய வார்த்தைகளைக் கேட்ட இராமபிரான் நிலை:

மெய்த்திருப் பதம் மேவு என்ற போதினும்
இத்திருத் துறந்து ஏகு என்ற போதினும்
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள்

என்றும்,

தெம்மடங்கிய சேனிலங் கைகயர்
தம்மடந்தை உன் தம்பிய தாமென
மும்மடங்கு பொலிந்த முகத்தினன்
வெம்மடங்கலை உன்னி வெதும்புவாள்.

இலங்கையிற் சிறையிருக்கும் சீதையின் நினைவலைகளாகக் கம்பன் வடித்தவை இவை.

கைகேயி கூறிய செய்தி மூன்று. வாக்கியம் இரண்டு. "இத்திருத் துறந்து ஏகு"; "உன் தம்பியது ஆம்" என்பவைகள். இவ்விரண்டோடு தசரதன் வாக்கும் இணைக்கப்படுகிறது. அது "மெய்த் திருப்பதம் மேவு" (இவ்வாட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்) என்பது.

"மெய்த் திருப்பதம் மேவு" என்ற தசரதன் கூற்றும், "இத்திருத் துறந்து ஏகு" என்ற கைகேயியின் கூற்றும் முரண்பட்டவை. இவ்விரண் டும் வெவ்வேறு சமயங்களில், வெவ்வேறு பாத்திரங்களாற் கூறப் பெற்றவை. இவ்விரு வேறுவகைக் கூற்றுக்களைக் கேட்டபோது இராமன் மனம் ஒரே தன்மைத்தாக இருந்தது, சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை போல. இது பொருளியல் மெய்மையை உணர்ந்ததால் உண்டாகிய இராமனின் மனநிலை.

அயோத்தியின் ஆட்சியானது பரதனுக்கே உரியது-என்று கைகேயி கூறக்கேட்ட இராமன் முகம் இயல்பாக இருந்ததைவிட மூன்றுமடங்கு பொலிவு பெற்றது என்று கூறுகிறார் கம்பர். முன்பெல்லாம் தாமரையை

ஒப்பதாக இருந்த இராமபிரான் முகம் இவ்வார்த்தையைக் கேட்டபிறகு, தாமரையைத் தன் பொலிவால் வென்றுவிட்டது என்று வேறிடத்தும் சுட்டிக் காட்டினர். இந்நிகழ்ச்சியை, மாற்றத்தை 'அமைப்பியல் மெய்மைக்குரிய அறிவை' விளக்கும் எடுத்துக்காட்டாக அமைத்து விளங்கிக் கொள்ளலாம்.

பொருள்நிலை மெய்மை தொழிற்படும் முறை :

'பொருளியல் மெய்மை'யானது நேர்முகத் துய்ப்பின் மூலம் அமைகிறது என்பதை முன்னரே கண்டோம்.

எந்த ஒரு மனிதனும் நேர்முகத் துய்ப்பின் மூலம் பெறுகின்ற மனநிலைகளை இரண்டனுள் அடக்கி விடலாம். அவை இன்பம், துன்பம் என்பவைகளே.

செவிவழித் துய்ப்பில் இல்லாத ஒரு வாய்ப்பை இயற்கையாகப் பெற்றிருக்கிறது நேர்முகத் துய்ப்பு அல்லது பொருளியல் மெய்மை. அனுபவித்தவுடன் அனுபவத்தைக் கணக்கிட்டுப் பார்க்கும்முறை. அனுபவித்த அவன் விரும்பியோ விரும்பாமலோ அக்கணக்கு அவனுள்ளத்தில் பதியத் தொடங்கி விடுகிறது. கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலன்களாலும் ஆரத் துய்த்த ஒருவன் உடனடியாகப் பெறுவது வெறுப்பு. தான் நுகர்ந்த இன்பத்தில் ஒரு சலிப்பு. அத்தகைய சலிப்புத் தோன்றியவுடன் ஒரு ஞானம் உதயமாகிறது. 'சிற்றின்பம்' என்று பெயர் வந்ததற்கு இப்படியும் ஒரு காரணம் அமைத்துக் கொள்வதில் தவறு இல்லை. சிறுமை என்ற சொல் ஞானத்தை உணர்த்தும். சண்டேசப் பெருமானையும், ஞானசம்பந்தப் பெருமானையும் சேக்கிழார் பெருமான் சிறிய பெருந்தகை என்று ஆளுவாராதலால் அவ்வாட்சி வயதை நோக்கியதன்று. 'ஞானப் பெருந்தகை' என்பதே பொருள். இனி, அறிவை உணர்த்தும் 'சித்' என்ற வடசொல்லின் திரிபாக, 'சிற்' என்பது வருவதுண்டு, சித்+அம்பலம்= சிற்றம்பலம் என்ருற்போல. இவ்வடிப்படையில் நோக்கினல் சிற்றின்பம் அதன் முடிவில் 'நீ அனுபவித்தது இன்பமன்று' என்ற ஞானத்தை உடனடியாகத் தரும் இன்பம் எனவும் கொள்ளலாம்.

பொருள் துய்ப்பின் மூலம் வரும் இன்பத்தை முழுமை இன்பத்தோடு ஒப்பிட்டுக் காணும் ஆற்றலை மனிதன் இயல்பாகப் பெற்றிருக்கிருன். முழுமை இன்பத்தை நோக்கும்போது இப்போது நாம் அனுபவித்த இன்பம் இந்த அளவுடையதுதான் என்று கணக்கிட்டுப் பார்த்து, குறையுடையதைத் தள்ளி, நிறையுடையதைப் பெற அவனைத் தூண்டுவதே இயற்கை மனிதனுக்குத் தந்த ஆற்றல். ஒருமுறை தராசில் வைத்து நிறுத்து அளவு பார்த்த பொருளை மீண்டும் மீண்டும் தராசில் வைத்து நிறுப்பானுனல் அவன் சிறு குழந்தை விளையாட்டைச் செய்கிருன் என்ருே பைத்தியக்காரன் செயல் என்ருே கூறவேண்டுமேயன்றி அறிவுடைமைச் செயலாக அதை ஆன்ருேர் கொள்ளார். ஒரு புலனல், இரு புலன்களால் அனுபவிக்கும் இன்பங்களை நோக்க ஐம்புலன்களும் இணைய அனுபவிக்கும் இன்பம் உயர்ந்ததாக இருக்கலாம். ஆனல் முழுமை இன்பத்தை நோக்கக் குறைவுடையது என்பதை யாரும் சான்றுகள் காட்டி விளக்க வேண்டியதில்லை. எங்களூர்க் குளத்தை விட, வீராணத்து ஏரி பெரியதுதான். ஆனல் வங்காளக் குடாக்கடலை நோக்கும்போது வீராணத்து ஏரியும் ஒரு குட்டைதானே!

இவ்வாறு அனுபவிக்கும் முறையை விளக்கும் சொற்களாக, "குறைவிலா நிறைவே, கோதிலா அமுதே" என்றெல்லாம் கூறி, நம்முடைய அருளாளர்கள் குறியிட்டுக் காத்தருளினர்கள்.

எனவே, 'பொருளியல் மெய்மை' நம்மை அனுபவத்தில் திளைக்க வைத்து, பண்பாராய்ச்சியில் ஈடுபடச் செய்து, முழுமையில் நாம் அனுபவித்த இது இந்த அளவுக்குக் குறியீடு பெறத்தகுந்தது என்ற நிலையை வழங்கி விடுகிறது. அதையே 'மெய்யுணர்தல்' என்ற சொல்லாற் குறிப்பிட்டுக் காட்டுகிறர் திருவள்ளுவர்.

முழுமையை நாம் அனுபவித்து அறிந்து இருந்தால்தானே இப்போது அனுபவித்த இதனை எடைபோட்டு, இத்தகைய அளவுடையது என வரையறுக்க முடியும்? என ஒரு வாதம் எழுப்புவர். இதற்கு நிறைவான ஒன்றை அனுபவிக்க வேண்டும் என்ற வரையறை இல்லை. அனுபவிப்புக்குப் பின் வெறுப்பு உண்டாகிறது என்ற அனுபவமே வெறுப்பை உண்டாக்காத இன்ப அனுபவம் ஒன்று இருக்க வேண்டும் என்ற அறிவைக் கொடுத்து விடும்.

திருவருளால் இயல்பாகக் கொடுத்த இம்முறையை மனிதன் அறிந்தும் புறக்கணிக்கிறன். அனுபவத்தை அவன் அறிவாக அமைத்துக் கொள்ளாமல் சாக்குப் போக்குச் சொல்லி நழுவவிட்டு விடுகிறன். அவன் தான் பெற்ற அனுபவத்தை ஒரு மணித்துளி நேரம் அமைதியாகச் சிந்தித்து, அறிவாக அமைத்து விட்டானேயானல் அவனுக்கு எப்போதும் தவறுவதற்கு வாய்ப்பே இல்லை.

இத்திருக்குறள் அறிவின் இலக்கணத்தை மட்டும் கூறவில்லை; அறிவை அமைக்கும் முறையைப் பற்றி மட்டும் கூறவில்லை. "இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே ஒழுக்கமுடை யார் வாய்ச்சொல்" என்று தாம் அமைத்த இலக்கணத்துக்கு இலக்கியமாக நின்று, மக்களை உயர்வுக்கு அழைத்துச் செல்லும் 'உண்மை' வாக்காகவும் இத் திருக்குறளைக் கொள்ளவேண்டும்.

முடிப்புரை :

அறத்துப்பால் மெய்யுணர்தல் அதிகாரத்திலும், பொருட்பால் அறிவுடைமை அதிகாரத்திலும் ஒரே அமைப்புடைய இரண்டு திருக் குறட்பாக்களை அமைத்துள்ளார். அவைகளில் 'மெய்ப்பொருள்' என்ற சொல்லின் பொருளைப் 'பொருளியல் மெய்மை' என்றும் 'அமைப்பியல் மெய்மை' என்றும் பிரிவுபட விளக்கங்கண்டு, 'பொருளியல் மெய்மைக்கு' நேர்முகத் துய்ப்பே காரணம் என்றும், 'அமைப்பியல் மெய்மைக்கு'ச் செவிவழித் துய்ப்பே காரணம் என்றும் விரிவாக்கம் செய்யப்பெற்றது.

செவிவழித் துய்ப்பின் மூலம் அமையும் 'அமைப்பியல் மெய்மைக்கு' இல்லாத ஒரு பேறு நேர்முகத் துய்ப்பின் மூலம் அமையும் பொருளியல் மெய்மைக்கு உண்டு என்பதும் விளக்கம் செய்யப்பெற்றது.

திருவள்ளுவர் காட்டும் 'அறிவை அமைக்கும் முறை' இருவகைகளாகப் பிரிந்து செயல்படுகிறது என்பதை இந்த நான்கு கட்டுரைகளாலும் தெளிய உணர்ந்து கொள்ளலாம்.

திருமாலடியார்

இராமாநுசர்

வித்துவான் திரு. கா. அ. மணவாளன், எம்.ஏ., பி.ஓ.எல்.

(12)

பெரியநம்பிகள் மாறனேரி நம்பிக்குப் பிரமமேத முறையில் ஈமக்கடன்களைச் செய்ததால் சினங்கொண்ட சீரங்கத்து வைணவர்கள், அவருடைய வீட்டு வாசலில் முள்வேலிக்கட்டி, அவரை ஒதுக்கி வைத்தனர். இராமாநுசரும் அவருடைய அணுக்கத் தொண்டர்களான கூரத்தாழ்வான், முதலியாண்டான், எம்பார் போன்றவர்கள் மட்டுமே பெரியநம்பிகளின் வீட்டுக்குச் சென்று வந்தனர். பெரியநம்பிகளும் 'திருவரங்கன் திருவுள்ளம் இப்படியோ' என்று அமைதியாக எண்ணி அத்துழாயோடு தம் திருமாளிகையிலேயே தங்கி இருந்தார்.

திருத்தேர் விழா :

திருவரங்கத்தில் அரங்கனுக்குத் தேர்விழா நடந்தது. நான்கு வீதிகளிலும் வலமாகத் திருத்தேர் வந்து கொண்டிருந்தது. பெரியநம்பிகள் வசிக்கும் வீட்டுவாசலில் திருத்தேர் வந்தபொழுது, ஒருவரும் எதிர்பாராத வகையில் பெரிய நம்பிகளின் திருமகளான அத்துழாய் ஓடிவந்து, தேர்சக்கரத்தின் முன்னே விழுந்து தேரை நிறுத்தி விட்டாள். எல்லோரும் வடத்தைக் கீழே போட்டு விட்டார்கள். அந்த நிலையில் அத்துழாய் எழுந்திருந்து திருவரங்கனை நோக்கி, "எம்பெருமானே! நீ எத்தனையோ அவதாரங்களைச் செய்துள்ளாய். அந்த அவதாரங்களுள் கண்ணனாகப் பிறந்தபொழுது மாடு மேய்க்கும் இடையர் குலப்பிள்ளைகளுடன் வேற்றுமையின்றிப் பழகியதோடு அவர்களுடன் உணவு உட்கொள்ளவில்லையா? தாழ்ந்த வகுப்பினர் என்று மற்றவர்கள் ஒதுக்கிய பொழுது, திருப்பாணாழ்வாரை நீ ஏற்றுக்கொண்டு உன்பக்கத்தில் இடமளிக்கவில்லையா? இப்படியெல்லாம் நடந்து கொண்ட நீ அடியேன் தந்தை மாறனேரி நம்பிக்குச் செய்த பிரமமேத சரம கைங்கரியத்தை ஏற்கமாட்டீரோ? ஊரார் இப்படி இழிவுபடுத்துகிறார்களே! இது முறையோ"? என்று கேட்டுப் புலம்பினாள். மேலும் பெரியநம்பிகளின் செயல் சரியா தவறா என்பதை முடிவு செய்த பின்பே திருத்தேர் செல்ல வேண்டும் என்று ஆணை இட்டாள்.

பிறகு சில மணி நேரம் கழித்து அரங்கன் அருகில் கைங்கரியம் செய்துகொண்டிருந்த அர்ச்சகர்மேல் பெருமாள் ஆவேசமாக வந்து, "அன்பர்களே பெரியநம்பிகள் மாறனேரி நம்பிக்குச் சாத்திர முறைப்படி ஈமக்கடன்கள் செய்தது சரியே; அவரை நம்மிடம் அழைத்து வாருங்கள்" என்று கூறினார். உடனே எல்லோரும் பெரியநம்பிகளின் வீட்டிற்குள் சென்று அவரைத் தண்டனிட்டு வணங்கி, "சுவாமி, பெருமாள் ஆணை; தாங்கள் திருத்தேர் தட்டுக்கு வரவேண்டும்" என்று வேண்டிக் கொண்டனர். நம்பிகளும் பெருமானின் கட்டளைப்படி வாசலில் வந்து

பெருமாளைச் சேவித்து அவன் கருணையைப் புகழ்ந்து போற்றினர். திருத்தேரும் புறப்பட்டது. இந்த நிகழ்ச்சியால் இறையடியார்களில் சாதி உயர்வு தாழ்வு இல்லையென்பதை மக்கள் உணர்ந்தார்கள்.

இராமாநுசரும் பெரியநம்பிகளின் தொண்டு உள்ளத்தையும் திருமால் நெறியில் தீண்டாமை இல்லை என்பதையும் தம் சீடர்களுக்கு இந் நிகழ்ச்சியைக் கொண்டு உபதேசித்தார். திருமாலடியார்களைப் பழிப்ப வர்க்கு மறு உலகிலோ அல்லது மரணத்திற்குப் பின்போதான் தண்டனை என்பது இல்லை. பழிக்கும் அதே நேரத்தில் அந்த இடத்திலேயே தண்டனை கிடைத்துவிடுகிறது. அடியார்களைத் தாழ்ந்தவர்களென்றும், புலையர்களென்றும் பழிப்பாரேயானல் அப்படிப் பழிப்பவர்கள் எவ்வளவு உயர்ந்த குலத்தில் பிறந்திருந்தாலும் அவர்களே புலையர்களாகி விடுகிருர்கள்.

நுமர்களைப் பழிப்பர் ஆகில்
நொடிப்பதோர் அளவில் ஆங்கே
அவர்கள்தாம் புலையர் போலும்
அரங்கமா நகரு ளானே!

என்ற தொண்டரடிப் பொடியாழ்வார் வாக்கினை இராமாநுசர் எடுத்துக் காட்டி எல்லோரையும் தெளிவுபடுத்தினர். மற்றவர்களுக்குத் தெளிவு படுத்தியதோடு நில்லாமல் இராமாநுசர் தம் வாழ்க்கையில் சாதியாலும், இனத்தாலும் உயர்வு தாழ்வு பாராட்டக் கூடாது என்பதை பல நிலையில் கடைப்பிடித்து வாழ்ந்து காட்டினர்.

கொங்குப் பிராட்டி :

கொங்கு நாட்டில் மழையின்றிப் பஞ்சம் ஏற்பட்டது. அதனல் கணவனும் மனைவியுமாக இருவர் திருவரங்கத்திற்கு வந்து ஒரு வீட்டில் வாழ்ந்து வந்தனர். அவர்களில் அந்தக் கொங்கு நாட்டு அம்மைக்கு இராமாநுசர்பால் அதிக பக்தி உண்டாகியது. நாள்தோறும் அரங்கன் கோயிலுக்குச் சென்று நீர்தெளித்துக் கோலமிட்டும், திருமாலை கட்டிச் சார்த்தியும் வழிபட்டு வந்தாள்.

இராமாநுசர் ஒவ்வொரு நாளும் ஏழு வீடுகளுக்குச் சென்று பிட்சை எடுத்து அமுது செய்வது வழக்கம். இச்செயல் அக்கொங்குப்பிராட்டிக்கு அதிசயமாகத் தோன்றியது. அரசர்களும், பெரிய செல்வர்களும் இராமாநுசருடைய மடத்துக்கு வந்து தொண்டுசெய்து, அவரிடம் பணியைச் செய்யக் காத்துக்கிடக்கும்பொழுது, அவர் இம்மாதிரி வீடுகளில் பிட்சை எடுக்கிருரே என்று வியந்தார். ஒருநாள் அப்பிராட்டி இராமாநுசரைத் தண்டனிட்டு, "சுவாமி, தேவரீருடைய மடத்தில் அகளங்கசோழன் முதலான அரசர்களும், கூரத்தாழ்வான்-முதலியாண்டான் போன்ற சாத்திரங்களை யறிந்த ஆசாரியர்களும் தொண்டுசெய்து கொண்டிருக்க, தாங்கள் ஏன் பிட்சை எடுத்துப் புசிக்க வேண்டும்" என்று கேட்டுவிட்டாள்.

இராமாநுசரே அப்பிராட்டியின் கேள்விக்குப் பதிலளிக்கும் வகையில், "அம்மணி எப்படிப்பட்ட பெரியவர்களானுலும் இறைதத்துவத்தை அறிந்தவர்களாகில், அதற்குரிய மந்திரப்பொருளை உள்ளபடிஉணர்வார்களாகில் அப்பொருளின் ஆழத்தில் தம்மை மறந்து, தலை சாய்த்து விடுவர். தாழ்ந்தவர்கள் என்று ஒதுக்கப்பட்டிருந்தாலும் மெய்ப்பொருளின் தத்துவத்தை உணர்ந்தார்களாகில் அவர்கள்பால் அரசரும் அடிவணங்குவர்" என்று கூறினர். இதிலிருந்து யாவரையும் அடிமைப்

படுத்தவல்ல மாயமந்திரமான மெய்ம்மைப் பெருவார்த்தையான மந்திரத்தை இராமாநுசர் அறிந்திருக்கிறர் என்பதையுணர்ந்த அக்கொங்குப்பிராட்டி, இராமாநுசரைத் தண்டனிட்டு வணங்கினள். 'சுவாமி அடியேனுக்கும் அப்பெரும்பொருளை வழங்கவேண்டும்' என்று வேண்டினுள். இராமாநுசரும் அந்த அம்மாளை மடத்திற்கு வரும்படி கட்டளையிட்டுச் சென்று விட்டார். அவளும் மடத்துக்கு வந்து இராமாநுசருக்குத் தொண்டுகள் செய்து வந்தாள். சுவாமியும் அவளுக்கு திருவாழி திருச்சங்கு ஆகிய பொறிகளை ஒத்தி, பெரிய திருமந்திரத்தை உபதேசித்து கொங்குநாட்டிலிருந்து வந்தவளாகையால் கொங்குப் பிராட்டி என்ற திருப்பெயரையும் அளித்து சீவைணவியாக்கி அருளினர்.

பின்பு கொங்குநாட்டில் மழைபெய்து பஞ்சம் நீங்கியதைக் கேள்வி யுற்ற அப்பிராட்டி, தன் கணவனேடு இராமாநுசரின் உத்தரவைப் பெற்றுக்கொண்டு தன் ஊருக்குப் புறப்பட்டாள்.

இவ்விதம் பல திசைகளிலிருந்தும் பலர் வந்து இராமாநுசரைச் சரணடைந்து பேறு பெற்றார்கள். நாளடைவில் இராமாநுசருடைய வைணவப் பிரசாரத்திற்கு வேகமும் ஆற்றலும் அதிகரித்தன. இராமாநுசர் தம் இயக்கத்தை மேலும் வலிவுள்ளதாக்கத் திருவரங்கன் திருக்கோயிலைப் பயன்படுத்தலாஞர்.

வண்டினமுரலும் சோலை மயிலின மாலும்சோலை
கொண்டல் மீதணவும் சோலை குயிலினம் கூவும் சோலை
அண்டர்கோ னமரும்சோலை அணி திருவரங்கமென்னு
மிண்டர் பாய்ந்துண்ணும் சோற்றை விலக்கி நாய்க்கிடுமினீரே!

என்ற தொண்டரடிப் பொடியாழ்வார் திருவாக்குப்படி இயற்கையெழில் வாய்ந்த அச்சோலை சூழ் திருவரங்கத்தை, ஞானப்பூங்காவாக்கினர். கோயில் வழிபாட்டிலும், பூசை முறைகளிலும் பல சீர்திருத்தங்களைச் செய்தார். கோயில் நிருவாகத்தைத் தாம் மேற்கொண்டு, அவரவர் கடமையை ஒழுங்காகச் செய்யவேண்டுமென்று சற்றுக் கடுமையாகவே இருந்தார். இதனல் கோயிலில் பணிபுரியும் சிலர் இவரை வெறுக்கவும் தலைப்பட்டனர். ஆனல் கோயில் சீர்திருத்தங்களை வரவேற்ற அவ் வூராரின் ஒத்துழைப்பால் தந்நலமிகளுடைய சூழ்ச்சிகள் பலிக்கவில்லை. என்றாலும் இராமாநுசரைச் சிலர் விஷமிட்டுக் கொல்லவும் முற்பட்டனர். அவர் பிட்சையெடுத்து உண்ணுவது வழக்கம். அப்பிட்சையில் நஞ்சு கலந்து இடுவது என்றும் திட்டமிடப்பட்டது. அதன்படி கோயில் பணியாளர் ஒருவருடைய மனைவியை அம்மாதிரி நஞ்சு கலந்த அன்னத்தை இராமாநுசருக்கு அளிக்கும்படி ஏற்பாடு செய்தார்கள். அந்த மாதோ அந்த பாவகாரியத்தைச் செய்ய மறுத்தாள். என்றாலும் கணவனுடைய கட்டளைக்குப் பயந்து முடிவில் இசைந்தாள்.

இராமாநுசர் அன்று வழக்கம்போல் அந்த வீட்டுக்கும் பிட்சை ஏற்க வந்தார். அந்த அம்மையும் இராமாநுசருடைய களங்கமற்ற திரு முகத்தை நோக்கினள். கண்களில் வழிந்த நீரைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள். கொண்டுவந்த அன்னத்தைப் பிட்சைப் பாத்திரத்தில் ஒரு ஓரமாகத் தனியே வைத்தாள். வழக்கத்திற்கு மாருக அவள் அழுததும், ஓரத்தில் பிட்சை இட்டதும் இராமாநுசருக்கு வியப்பையூட்டியது. ஏதோ தவறு நடந்துள்ளது என்று அறிந்தார்.

உடனே காவிரிக்குச் சென்று அந்த அன்னத்தை நீரில் கரைத்து விட்டார். பிட்சைப் பாத்திரத்தையும் கழுவியெடுத்துக் கொண்டார். சிறிது நேரத்தில் அவர் கண்முன்னமேயே அங்கு சிந்திய சில சோற்றுப் பருக்கைகளையுண்ட காகம் மயங்கி வீழ்ந்ததைக் கண்டார். சூழ்ச்சி புரிந்து விட்டது. ஆயினும் கருணை வள்ளலான இராமாநுசர் அதிகம் வருந்தவில்லை. தமக்குத் தீமை செய்தவர்களையும் மன்னித்தார். அந்தக் கோயிற் பணியாளனையும் வரவழைத்து புத்திமதிகளைச் சொல்லித் திருத்தினர். அவனும் தன் தவறை உணர்ந்து தண்டனிட்டு மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டான். இவ்விதம் இராமாநுசர் திருவரங்கக் கோயிலிலும், சமூகத்திலும் செய்துவரும் சீர்திருத்தங்களால் பொதுமக்களிடம் நல்ல வரவேற்பும், புகழும் உண்டானலும் தந்நலமிகளால் கொடுமைகளும், பழிப்பும் மிகுதியாக உண்டாயின. நஞ்சிட்டு இராமாநுசரைக் கொல்ல முயன்ற செய்தி எப்படியோ எங்கும் பரவி விட்டது. சீடர்கள் பதைபதைத்தனர். இராமாநுசரை அன்று முதல் பிட்சைக்கு அனுப்ப மறுத்தனர். நான் முன்னே நான் முன்னே என்று அவருக்குத் தொண்டு செய்ய எல்லோரும் விரும்பினர்.

இந்தச் செய்தி திருக்கோட்டியூர் நம்பிக்கும் தெரிந்து விட்டது. உடனே அவர் இராமாநுசரைக் காண விரும்பினர். முன் கூட்டியே தம் வருகையைத் தெரிவித்துவிட்டுத் திருவரங்கத்துக்குப் புறப்பட்டார். கோட்டியூர் நம்பியின் வருகையையறிந்த இராமாநுசரும் தாய்ப்பசுவைக் காண விழையும் கன்றுபோலே சீடர்களுடன் ஆசாரியரை வரவேற்கக் காவேரிக் கரைக்குப் புறப்பட்டார். அப்போது நல்ல கோடைகாலம். நடுப்பகல் வேளை, காவேரியின் ஓரப்பகுதியில் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தாலும் நடுப்பகுதியெல்லாம் சூடேறி கால் வைத்து நடக்க முடியாமல் வெய்யில் கடுமையாக இருந்தது.

திருக்கோட்டியூர் நம்பிகளும், தம் பரிவாரங்களுடன் காவிரியின் இடையாற்றுக்கு வந்து விட்டார். இராமாநுசரும் தம் சீடர்குழாமுடன் அவரை நெருங்கினர். குருவைக் கண்டதும் வேரற்ற மரம்போல் கீழே மணலில் வீழ்ந்து தண்டனிட்டார். இப்படிக் கீழே நடுப்பகல் வேளையில் மணல் சூட்டையும் பொருட்படுத்தாமல் தண்டனிட்டுக் கிடக்கும் இராமாநுசரைக் கோட்டியூர் நம்பிகள் வாரியெடுத்துத் தழுவிக் கொள்ளவில்லை.

சீடர்களெல்லாம் வெய்யிலில் நிற்க முடியாமல் தவிக்கும்பொழுது உடம்பு முழுவதும் சூடான மணலில் படியும்படி வீழ்ந்து கிடக்கும் இராமாநுசருடைய திருமேனியைக் கண்டார். கிடாம்பி ஆச்சான் என்னும் சீடர், நெஞ்சம் பதைத்தார். "இப்படியும் அநியாயம் நிகழ்வதுண்டோ? இதென்ன குரு-சீட முறை. மென்மலர் தணலில் வாடிக் கருகுவதுபோலே எம்மிராமாநுசருடைய திருமேனி வாடிக் கருகுகிறதே. நீர் என்ன குரு? இப்படி வெய்யிலில் வாடி வதங்கும் சீடனை வாரி அணைக்கா விட்டாலும், எழுந்திரு என்று ஒரு சொல் கூடச் சொல்லவில்லையே" என்று ஆவேசமாகக் கேட்டார். அதோடு இராமாநுசரையும் தம் இருகரங்களாலும் வாரி அணைக்கப்போனர்.

அப்பொழுது திருக்கோட்டியூர் நம்பி புன்முறுவலுடன் "இப்படிப்பட்ட சீடரைக் கண்டுபிடிக்கத்தான் நான் இதுவரை வாளாவிருந்தேன். இதற்காகத்தான் நான் இவ்வளவு தூரம் நடந்து வந்தேன். இந்த இராமாநுசருடைய திருமேனியில் உமக்குள்ள அக்கரையை-ஆசையை-பக்தியை நான் கண்டுகொண்டேன். இனி நீரே இந்த

இராமாநுசருக்கு உணவு படைத்து அளிக்கும் தொண்டினைச் செய்து வருவீராக. இன்று முதல் இராமாநுசர் ஏழு வீட்டு பிட்சைக்குப் போக வேண்டாம். உம்மால் அளிக்கப்படும் ஏக பிட்சையே போதும்" என்று கூறி இராமாநுசரையும் கிடாம்பி ஆச்சானையும் இறுகத் தழுவினார். கிடாம்பி ஆச்சானும் இராமாநுசருக்கு உணவு படைத்து வழங்கும் தொண்டினை அளித்த திருக்கோட்டியூர் நம்பியின் கருணை உள்ளத்தைப் புரிந்து கொள்ளாமல் கடிந்து கொண்டோமே என்று தனக்குள் எண்ணிக் கொண்டார். அன்று முதல் கிடாம்பி ஆச்சான் இராமாநுசருக்குப் பரிசாரகத் தொண்டாற்றி வந்தார்.

இவ்விதம் கிடாம்பிஆச்சானைப் போன்ற சீடர்களையும் திருக்கோட்டியூர் நம்பி போன்ற ஆசாரியர்களையும் பெற்றதனால் இராமாநுசரால் இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் அளவற்ற தொண்டுகளைச் செய்ய முடிந்தது. இராமாநுசருடைய கருணைக்கு முன் எந்தப் பகைதான் நிற்க முடியும்? இராமாநுசருடைய இக்கருணையை உணர்ந்ததால்தான் திருவரங்கத்தமுதனார் தாம் இயற்றிய இராமாநுச நூற்றந்தாதியில்,

காரேய் கருணையிராமாநுசா இக்கடலிடத்தில்
ஆரேயறிபவர் நின்னருளின்தன்மை அல்லலுக்கு
நேரேயுறைவிடம் நான்வந்து நீயென்னையுய்த்தபின் உன்
சீரேயுயிர்க்குயிராய். அடியேற்கின்று தித்திக்குமே

என்று வெகுவாகப் போற்றியுள்ளார்.

(தொடரும்)

ஸ்ரீ ஆண்டாள்

ஸ்ரீவில்லிபுத்தூரில் பூமிதேவியின் அம்சமாக வந்தவள் ஆண்டாள். திருவாடிப்பூரத்தில் விஷ்ணுசித்தர் கண்டெடுத்து வளர்த்த மாணிக்கம். பிள்ளைத்திருநாமம் கோதை. கண்ணன் லீலைகளைத் தந்தைபாற் கேட்டு மகிழ்ந்தவள். அரங்கனுக்குத் தந்தையார் தொடுத்த மாலையைத் தன் கழுத்தில் அணிந்து அழகு பார்த்து, "சூடிக்கொடுத்த நாச்சியார்" எனச் சிறப்புற்றவர்.

அழகு வடிவாய கோதை மணப்பருவத்தை யடைந்தபோது "உன் உள்ளம் யாரை நாடுகிறது சொல்லம்மா" என்று தந்தையார் கேட்க "உங்கள் பாசுரத்தில் வளரும் மகனை மணந்து கொள்ள என் மனம் நாடுகிறது; உலகனைத்தையும் தாங்கும் உத்தமன் திருப்பாதங்களை மடியில் வைத்துப் பாதசேவை செய்யக் காதல் கொண்டுள்ளேன். ஆசையுடம்பால் இனி வேறடையும் இன்பம் யாது? " என்றார் கோதை. "பெரிய பாரத்தை என் தலைமேற் சுமத்துகிறாயே! உன்னை அரங்கனிடம் எவ்வாறு கொண்டு சேர்ப்பேன்?" எனத் தளர்ந்தார் தந்தை. ஆனால் மாயனை நாடிய மங்கையின் மனம் தளரவில்லை. மனதுக்கிசைந்த மணாளனைப் பெற மாதங்களிற் சிறந்த மார்கழியில் அரிய நோன்பிருந்து மாதவன் புகழைப் பாடிப்பரவினார். கண்ணன் கனவிலே தோன்றிக் காட்சியளித்துக் கருணை செய்தான். தேவாதி தேவர்கள் புடைசூழ்ந்து வாழ்த்த நாராயணன் கைத்தலம் பற்றிச் செல்லும் பேறு பெற்று "ஆண்டாள்" என உயர்ந்தாள்!

'தன் இல்லில் அமுது உண்டு வளர்ந்தவளை, ஒரு மானிடப்பெண் என்று ஏசினேனே! என் அப்பனை ஆளவந்தவள் என்பதை அறிய முடியவில்லையே! என்னம்மையின் பெருமையை இன்றன்றோ வுணர்ந்தேன்!' என்று ஆழ்வார் மெய்மறந்து பாடினார்; ஆடினார்.

பரமனுக்குப் பல்லாண்டு பாடிப் பெரியாழ்வார் எனப்பெயர் பெற்றவர் தாம் வளர்த்த மகளைத் தந்து மாமனார் என்னும் சிறப்பும் பெற்றார்! எனினும், ஏதேனும் சீர்வரிசை தந்தாரோ? என்பது சிந்தனைக் குரியது.

வாரணம் ஆயிரம் பாடி வடபெருங்கோயிலுடையானை வணங்கிய கோதையின் புகழ்மொழிகளைக் கேட்டு நிம்மதி பெறாமல், ஒரு மாமனார் வாயிலாகவும் புகழ்மொழிகளைக் கேட்கத் திருவுளங்கொண்டு திருவிளையாடல் செய்தான் திருவரங்கப்பெருமான்! அவனருளால் அவன்றாள் வணங்கிய ஆழ்வார் நீடூழி காலம் அழியாமல் நிற்கும் திருப்பல்லாண்டு திருமொழி ஆகிய புகழ்மிக்க பாக்களைப் பாடினார்! அந்தப் பாசுரங்களே அரங்கநாதனுக்கு அவர்தந்த சீதனப் பொருள்கள். அவற்றைச் சிறப்பாக ஏற்றுக் கொண்டு அருள் செய்தான் எம்பெருமான்.

தமிழ்ச்செல்வர்,
ரா. சு. இராமலிங்கம்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் புராணம்

கொற்றவன்குடி உமாபதிசிவம் அருளிச்செய்த மூலமும்

திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணுமலை ஆதீனம் ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் அருளிய பதவுரையும்

பிரதி செய்தவர்: சேக்கிழார்தாசன் இராமசேஷன்

இல்லறத்தி னின்றவர்க டிருநீல கண்டர்
இயற்பகையா ருள்ளிட்டார் மூர்த்தியா ரப்பர்
நல்லதுற வறம்பிரம சாரிகள்சண்டேசர்
நானிலத்தி லரனடியார் தங்களுடன் சேர்ந்து
செல்கதிபெற் றவர்ஞான சம்பந் தருடனே
திருமணத்தி லொருமணமாய்ச் சேர்ந்தவர்களனேகர்
பல்வளஞ்சே ராரூர ருடன்சேரர் கையிற்
பரியுகைக்க வுடன்சென்ற பரிசனமெண் ணிறந்தோர். 47

(இ-ள்): திருநீலகண்டர் இயற்பகையாருள்ளிட்டார்–திருநீலகண்டர் இயற்பகையார் இன்னுஞ்சிலர்; இல்லறத்தினின்றவர்கள்–இல்லறத்திலிருந்து முத்தியடைந்தவர்களாம்; மூர்த்தியார் அப்பர் நல்ல துறவறம்–மூர்த்தி நாயனுர் திருநாவுக்கரசு சுவாமிகள் நல்ல துறவறத்திலிருந்து முத்தி யடைந்தவர்களாம்; பிரமசாரிகள் சண்டேசர்–சண்டேச நாயனுர் பிரமசரிய ஆச்சிரமத்திலிருந்து முத்தியடைந்தவராம்; நானிலத்திலரனடியார் தங்களுடன் சேர்ந்து செல்கதி பெற்றவர்–உலகத்தில் சிவனடியார்களுடன் கூடி முத்தியடைந்தவர்கள் (சிலர் அவர்கள் யாரெனில்); ஞானசம்பந்தருடனே திருமணத்திலொருமணமாய்ச் சேர்ந்தவர்களனேகர்–திருஞானசம்பந்த சுவாமிகளுடைய திருமணத்தில் அவருடன் முத்தியடைந்தவர் அனேகம்பேர்; பல்வளஞ்சேர் ஆரூரருடன்–பல வளப்பங்களையுள்ள நம்பியாரூரரென்னும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடன்; சேரர் கையிற் பரியுகைக்க–சேரமான் பெருமாள் நாயனுர் குதிரையேறிக் கொண்டு கயிலைக்குச் செல்ல; உடன்சென்ற பரிசன மெண்ணிறந்தோர்–அப்போது அவருடன் சென்று முத்தியடைந்தவர்கள் அளவிறந்தோர்கள். (எ–று).

தனியடியார்களில் பிரமசரியத்தும் துறவறத்தும் நின்ற மூவர்நீக்கி ஏனையோர் இல்லறத்தினராதலின் உள்ளிட்டார் என்ருர்.

சிவனடியா ருடன்பகையாய் முத்தியடைந் தவர்கள்
சேய்ஞலூர்ச் சண்டேசர் பிதாவெச்ச தத்தன்
கவர்புகழ்சேர் கோட்புலியா ருரைத்ததிரு விரையாக்
கலிபிழைத்த கிளைபகைத்து நரகினைச்சென் றடைந்தோர்
தவரான மூர்த்தியா ரிறைவனுக்குச் சாத்துஞ்
சந்தனக்காப் பினைவிலக்கி யமண்சமயச் சார்வாய்ப்
புவிபுரந்த கருநடமன் னவன்முத லனேகர்
புராணகதை யினைப்பிரித்துப் புகலவெளி தலவே. 48.

(இ-ள்): சேய்ஞலூர்ச் சண்டேசர் பிதா வெச்சதத்தன் - திருச்சேய் ஞலூரில் அவதரித்த சண்டேசர் பிதாவாகிய எச்சதத்தன் என்பவனும்; கவர்புகழ்சேர் கோட்புலியார் உரைத்த-பரந்த புகழ் சேர்ந்த கோட்புலி நாயனுர் சொல்லிய; திருவிரையாக் கலி பிழைத்தகிளை-திருவாணையைக் கடந்த சுற்றத்தாரும்; சிவனடியாருடன் பகையாய் முத்தியடைந்தவர்கள் சிவனடியார்களைப் பகைத்து முத்தியடைந்தவர்கள்; தவரான மூர்த்தியார் இறைவனுக்குச் சாத்தும்-தவசிரேட்டராகிய மூர்த்தி நாயனுர் சிவபிரானுக்குச் சாத்துகின்ற; சந்தனக்காப்பினை விலக்கி-சந்தனக் குறடு கிடையாதபடி விலக்கி; அமண்சமயச் சார்பாய்ப் புவிபுரந்த-சமண்சமயச் சார்பினனுகி யுலகத்தையாண்ட; கருநட மன்னவன்-முதலனேகர்-கருநடதேசத் தரசன் முதலிய அனேகர்; சிவனடியாருடன் பகைத்து நரகினைச் சென்றடைந்தோர்-சிவனடியார்களைப் பகைத்து நரகத்தை யடைந்தவர்கள்; புராணகதையினைப் பிரித்துப்புகல வெளிதல-இவ்வாறு புராண சரித்திரத்தை அளவிட்டுச் சொல்லுதல் அரிதாம். (எ-று). ஏ-அசை.

ஆரூரர் திருத்தொண்டத் தொகையுரைத்த நாளி
லடித்தொண்டு செய்ததொண்டர் சிலரவர்க்குமுன்னே
பேரூர்மெய்த் தொண்டுசெய்த பேர்சிலபே ரவர்க்குப்
பிறகுதிருத் தொண்டுசெயும் பேர்சிலபே ராகச்
சீரூருந் திருத்தொண்டர் புராணத்திற் சேர்த்துச்
சேவையர்கோன் சேர்வைசெயுந் தொண்டரளவிறந்தோர்
காரூரு மணிகண்டர்க் கவரவர்கள் செய்த
கைத்தொண்டி னிலைகரைகண் டுரைக்கவெளிதலவே. 49

(இ-ள்): ஆரூரர் திருத்தொண்டத் தொகையுரைத்தநாளில்-சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகை யோதிய அக்காலத்தில்; அடித்தொண்டு செய்த தொண்டர் சிலர்-திருவடித் தொண்டு செய்து கொண்டிருந்த அடியார்கள் சிலர்; அவர்க்கு முன்னே பேரூர் மெய்த்தொண்டு செய்த பேர் சிலபேர்-சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்திற்கு முன் பெருமை மிக்க உண்மையாகிய திருத்தொண்டு செய்தவர்கள் சிலர்; அவருக்குப் பிறகு திருத்தொண்டு செயும்பேர் சில பேராக-அவருக்குப் பிற்காலத்தில் திருத்தொண்டு செய்கின்றவர்கள் சிலர் இவ்வாருக; சீரூருந் திருத்தொண்டர் புராணத்தில்-சிறப்புப் பொருந்திய திருத்தொண்டர் புராணத்தில்; சேவையர்கோன் சேர்த்துச் சேர்வைசெயுந் தொண்டரளவிறந்தோர்-சேக்கிழார் சுவாமிகள் சேர்த்துச் சேர்வை செய்த அடியார்கள் அனேகம் பேர்களாம்; காரூரு மணிகண்டர்க் கவரவர்கள் செய்த கைத்தொண்டினிலை-காளகண்டராகிய சிவபெருமானுக்கு அந்தந்த அடியார்கள் செய்த கைத்தொண்டினது நிலைமையை; கரைகண்டுரைக்க எளிதல-அளவு கண்டு சொல்ல எளிதல்ல. (எ-று). ஏ-அசை.

ஒருலகோ வொருதிசையோ வொருபதியோ தம்மி
லொருமரபோ வொருபெயரோ வொருகாலந் தானே
பேருலகி லொருமைநெறி தருங்கதையோ பன்மைப்
பெருங்கதையோ பேரொன்ரே வல்லவே யிதனை
யேருலகெ லாமுணர்ந்தோ தற்கரிய வன்னென்
றிறைவன்முத லடியெடுத்துக் கொடுத்தருளக்கொண்டு
பாருலகி னுமகணின் றெடுத்துக்கை நீட்டப்
பாடிமுடித் தனர்தொண்டர் சீர்பரவ வல்லார். 50.

(இ-ள்): ஓருலகோ ஒருதிசையோ ஒரு பதியோ-(அத்திருத்தொண்டர்க் குரியவை) ஒரு நாடோ ஒரு திக்கோ ஒரூரோ; தம்மிலொரு மரபோ வொருபெயரோ வொருகாலந்தானே-தங்களுள் ஒருமரபோ ஒருவரோ ஒரே காலமோ; பேருலகிலொருமை நெறிதருங்கதையோ-பெரிய உலகத்தில் ஒரு வமிசமான சரித்திரத்தைச் சொல்லுங்கதையோ; பன்மைப் பெருங்கதையோ பேரொன்றே வல்லவே-பல வமிசச் சரிதங்கூறும் பெருங்கதையோ ஒருபெயரோ இவைகளல்ல (ஆனல்) இதனை யேருலகெலா முணர்ந்தோதற்கரியவனென்று-இதனை மேன்மையாகிய உலகெலா முணர்ந்தோதற்கரியவன் என்று; இறைவன் முதலடியெடுத்துக் கொடுத்தருளக் கொண்டு-சிவபிரான் முதலடியெடுத்துக் கொடுத்தருள அதை முதலாகக் கொண்டு; பாருலகினுமகணின் றெடுத்துக்கை நீட்ட-இவ்வுலகில் நாமகள் சொற்களை எடுத்துக்கொடுக்க; தொண்டர்சீர் பரவவல்லார் பாடி முடித்தனர்-அடியார்களது சிறப்பைத் துதி செய்ய வல்லவராகிய சேக்கிழார் நாயனுர் புராணமாகப் பாடி முடித்தனர். (எ-று).

ஓர் வமிச பரமாய் அதனைத் தொடர்ந்து வாராது பலபட வருதலின் ஒருமை நெறிதருங் கதையாகா தென்றும் பல மரபு குறித்துப் பலவாய் வரினும் தொண்டர் புராணமென ஒன்ருய் நிற்றலின் பன்மைப் பெருங் கதையாகா தென்றுங் கூறினுரெனக் கொள்க.

கருங்கடலைக் கைநீத்துக் கொளவெளிது முந்நீர்க்
  கடற்கரையி னுய்மணலை யெண்ணியள விடலாம்
பெருங்கடன்மேல் வருந்திரையை யொன்றிரண்டென் றெண்ணிப்
  பிரித்தெழுதிக் கடையிலக்கம் பிரித்துவிடலாகுந்
தருங்கடலின் மீனையள விடலாகும் வானத்
  தாரகையை யளவிடலாஞ் சங்கரன்ரு டமது
சிரங்கொடிருத் தொண்டர்புரா ணத்தையளவிடநஞ்
  சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்குமரிதே. 51.

(இ-ள்): கருங்கடலைக் கைநீத்துக்கொள எளிது-கருங்கடலைக் கையினுல் நீந்திக் கரையேறுதல் எளிதாம்; முந்நீர்க் கடற்கரையினுய் மணலை எண்ணி அளவிடலாம்-முந்நீரென்னும் கடற்கரையிற் பொருந்திய நுண்ணிய மணலையும் இவ்வளவென்றளவிட்டுச் சொல்லலாம்; பெருங்கடன் மேல் வருந்திரையை-பெரிய கடலில் மறித்து மறித்து வருகின்ற அலைகளையும்; ஒன்றிரண்டென்றெண்ணிப் பிரித்தெழுதி-ஒன்று இரண்டு என்று எண்ணிப் பிரிவாக எழுதி; கடையிலக்கம் பிரித்து விடலாகும்-மொத்தத் தொகை கூட்டிச் சொல்லலாம்; தருங்கடலின் மீனையளவிடலாகும்-வளப்பங்களைக் கொடுக்குங்கடல் மீனையும் இவ்வளவென்றளவிடலாம்; வானத்தாரகையை யளவிடலாம்-ஆகாயத்தின்கண் விண்மீன்களையும் அளவிடலாகும்; சங்கரன்ருடமது சிரங்கொடிருத் தொண்டர் புராணத்தையளவிட-சிவபிரான் திருவடிகளைத் தமது சிரசில் தரித்த திருத்தொண்டர்கள் புராணத்தை அளவிட்டுச் சொல்ல; நஞ்சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்குமரிது-நமது சேக்கிழார் நாயனுருக்கு எளிதன்றித் தேவர்களுக்கு மருமையானதாகும். (எ-று). ஏ-அசை.

அறுபதுபேர் தனித்திருப்பேர் திருக்கூட்ட மொன்ப
  தாகவறு பத்தொன்ப தரனடியார் கதையை
மறுவிறிரு நாவலூர்ச் சிவமறையோர் குலத்து
  வருசடைய னுர்மனைவி யிசைஞானி வயிற்றி

லுறுதிபெற வவதரித்த வாரூரர் முன்னு
ளுரைசெய்த திருத்தொண்டத் தொகைப்பதிகத் தடைவே
நறைமலிபூம் பொழில்புடைசூழ் திருநாறை யூரி
னம்பியாண் டார்திருவந் தாதிகடைப் பிடித்து. 52.

(இ-ள்): தனித்திருப்பேர் அறுபதுபேர்-தனியடியார்கள் அறுபதின் மரும்; திருக்கூட்டமொன்பது-தொகையடியார் ஒன்பதின்மரும்; ஆக அறுபத்தொன்பதரனடியார் கதையை-ஆக அறுபத்தொன்ப தென்னும் சிவனடியார்களது சரித்திரத்தை; மறுவிறிரு நாவலூர்ச் சிவமறையோர் குலத்து-குற்றமில்லாத திருநாவலூர்ச் சைவ வேதியர் குலத்தில்; வருசடையனுர் மனைவி யிசைஞானி வயிற்றில்-அவதரித்த சடையநாயனுர் மனைவியாராகிய இசைஞானியார் திரு வயிற்றில்;உறுதிபெற அவதரித்த ஆரூரர்-இவ்வுலகின்கணுள்ளார் நன்னிலைமை யடையும்படி திருவவதாரஞ் செய்தருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகள்; முன்னுளுரை செய்த திருத்தொண்டத் தொகைப் பதிகத் தடைவே-முற்காலத்திற் சொல்லிய திருத்தொண்டத் தொகையாகிய பதிகத்தின் முறைப்படி; நறைமலி பூம்பொழில் புடைசூழ் திருநாறை யூரில்-வாசனை கமழ்கின்ற மலர்ச்சோலை சூழ்ந்த திருநாரையூரில் அவதரித்த; நம்பியாண்டார் திருவந்தாதி கடைப்பிடித்து-நம்பியாண் டார் நம்பிசெய்தருளிய திருவந்தாதி கடைப்பிடித்து-நம்பியாண்டார் நம்பி செய்தருளிய திருவந்தாதியை ஆதாரமாக வைத்துக் கொண்டு. (எ-று).

பெயரென்றது பேரென மருவிநின்றது. ஈண்டுப் பெயர் என்றது பொருளை.

காண்டமிரண் டாவகுத்துக் கதைப்பரப்பைத் தொகுத்துக்
கருதரிய சருக்கங்கள் பதின்மூன்ரு நிலையுட்
டீண்டுரைத்த புராணத்திற் றிருவிருத்த நாலா
யிரத்திருநூற் றைம்பத்து மூன்ருக வமைத்துச்
சேண்டகைய திருத்தொண்டர் புராணமெனப் புராணத்
திருமுறைக்குத் திருநாமஞ் சீர்மைபெற வமைத்திட்
டாண்டகைமை பெறவெழுதி மைக்காப்புச் சாத்தி
யழகுபெறக் கவளிகையு மமைத்ததில்வைத் ததன்பின். 53

(இ-ள்): காண்டமிரண்டாவகுத்து-(செய்யத் தொடங்கிய புராணத்தை) இரண்டு காண்டங்களாகப் பிரித்து; கதைப்பரப்பைத் தொகுத்து-சரித்திரத்தின் விரிவைத் தொகுப்பாகச் செய்து; கருதரிய சருக்கங்கள் பதின்மூன்ருநிலையிட்டு-நினைத்தற்கரிய சருக்கங்கள் பதின்மூன்ருக வைத்து; ஈண்டுரைத்த புராணத்தில்-இவ்வாறியற்றின புராணத்தை; நாலாயிரத்திருநூற்றைம்பத்து மூன்ருகத் திருவிருத்தமமைத்து-நாலாயிரத்திருநூற்றைம்பத்து மூன்று திருவிருத்தங்களால் நிறைத்து சேண்டகைய திருத்தொண்டர் புராணமென-பெருஞ்சிறப்பினைப் பெற்ற திருத்தொண்டர் புராணமென்று; திருமுறைக்குத் திருநாமஞ் சீர்மைபெற வமைத்திட்டு-இப்புராணத் திருமுறைக்கு மேன்மை பொருந்தத் திருப்பெயரிட்டு; ஆண்டகைமைபெற எழுதி-நன்ருக ஏட்டிலெழுதி; மைக்காப்புச்சாத்தி-மைக்காப்பிட்டு; அழகுபெறக் கவளிகையுமமைத்து-அழகுபொருந்தப் புத்தகக்கவளிகை யொன்றை யும் செய்து; அதில் வைத்ததன்பின்-அதனுள் வைத்த பின்னர். (எ-று).

(தொடரும்)

உ

வருக! இராமேஸ்வரம்

இராமேசுவரம் தீவில் அமையப்பெற்றுள்ள அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில் மனம் கவரும் புராதன சிற்பக்கலைக் காட்சிகளுடனும், மிகப்பெரிய பிரகாரங்களையும் கொண்டதாக விளங்குகிறது. இராமாயண வரலாற்றுத் தொடர்பு கொண்டுள்ள இத்தலம் பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்ருக விளங்குவதுடன், வடக்கே காசியும், தெற்கே இராமேசுவரமும் என இந்துக்களுக்குத் தலைசிறந்த இரு பெரிய புண்ணிய தலங்களாகும்.

இத் திருக்கோயிலில் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. சேவார்த்திகள் வசதியாகத் தங்கவும், முறையாக வழிபடவும், இங்கு முக்கிய மாகக் கருதப்படும் இலக்குமண தீர்த்தம், தனுஷ்கோடி, கந்தமாதன பர்வதம் முதலான இடங்களுக்குப் போவதற்கு வசதியும் இக்கோயில் நிர்வாக அதிகாரியை அணுகுவதன் மூலம் அடையலாம்.

இக்கோயிலில் ஸ்ரீ இராமநாதசுவாமிக்கும், ஸ்ரீ பர்வத வர்த்தினி அம்பாளுக்கும் நடைபெறும் கோடி அர்ச்சனையில் சகஸ்ரநாமம் ஒன்றுக்கு ரூ. 10/– வீதம் கட்டணம் செலுத்தி அர்ச்சனை செய்து திருவருள் பிரசாதமும், வெள்ளிக் காசும் பெறலாம்.

இக்கோயிலில் நடைபெற்று வரும் மாபெரும் திருப் பணிக்குத் தாராளமாக நன்கொடை வழங்க வேணுமாய் வேண்டப்படுகிறது. இந்த நன்கொடைக்கு வருமானவரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இராமேசுவரம்,
தமிழ்நாடு.

நிர்வாக அதிகாரி
அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருமந்திரம்—2.

சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

சிவமே குருவாய் மெய்யுணர்த்திப் பொய்யகற்றி உயிரைத் தன் மலரடிக்கீழ் வைப்பன் என்பது அழியாதவுண்மை. "துன்னிய ஐம்புல வேடர் சுழலிற்பட்டுத் துணைவனையும் அறியாது துயர் உறுந் தொல்லுயிரை மன்னும் அருட் குருவாகி வந்து அவரின் நீக்கி மலம் அகற்றித் தான் ஆக்கி மலரடிக்கீழ் வைப்பன்" என்றது அருணந்தி தேவ நாயனார் திருமொழி. இத்திறத்திலே உபதேசம் புரியும் மெய்வடிவு குருவும், அதன் முன்னிலையான திருவருளும் ஆகும். உயிர்க்குப் போதரூபமாயிருக்கும் நிலையிலே குரு போதஞ்செய்யாது ஞானமாயிருக்கும் நிலையிலே அருள். இரண்டு இருவேறு நிலையின. அருள் போதம். அருளுருவம் போதரூபம். திருவருட்பயனிலே அருளது நிலையும் அருளுரு நிலையும் அமைந்த அதிகாரப்பெயரை இங்கு நினைக்க.

காட்டிடுங் கரணம் ஒன்றும் இல்லையேல் காணொணாதாம்
நாட்டிய இவற்றால் ஞானம் நணுகவும் ஒண்ணா, முன்னம்
ஈட்டிய தவத்தினாலே இறைஅருளுருவாய் வந்து
கூட்டிடும் இவற்றை நீக்கிக் குரைகழல் குறுகுமாறே.

என்றது சிவப்பிரகாசத் திருவிருத்தம் (68. இதனைத்

தம்முதல் குருவுமாய்த் தவத்தினின் உணர்த்தவிட்டு
அந்நியம் இன்மையின் அரன்கழல் செலுமே

என்னுந் தமிழ் முதல்நூலின் கருத்தொடு பொருத்தியுணர்க.

மாயாவாதம் பேசுமவர் சீவசாட்சி என வழங்குவர். அதன் நிலையை அவர் கருத்தில் ஏனையர் உணர்தல் எளிது அன்று. சைவத்திலும் சாட்சி உண்டு. திருமூலதேவநாயனார் திருமந்கிரத்தில் அப்பெயரால் அருள்கின்றார். எனக்குள் அச்சாட்சி இருக்கின்றது. யான் அதை நன்கறிவேன் அதுவேறு யான்வேறு என்னாதவாறு அதுவே யானும் யானே அதுவாயும் நிற்கும். அது யானாகி நின்ற நிலையில் அடியேன் வடிவில் உள்ளது அச்சாட்சியான் அச்சாட்சியை என் உள்ளே கொண்டுள்ள நிலையில், யான் அச்சாட்சி வடிவாய் விளங்குவேன். யதி என்பது வடசொல். அது தமிழில் எதி என்று வழங்கப்படும். யதிராசன் என்பது எதிராசன் என்றுதான் கொள்ளப்படும். தமிழில் யகரம் மொழிமுதலாதல் இல்லை. ஆவோடல்லது யகரம் முதலாகாது என்பது தொல்காப்பியம்.

'கதிர்கண்ட காந்தம் கனலின் வடிவாம்
மதிகண்ட காந்தம் மணிநீர் வடிவாம்
எதிகொண்ட சாக்கி யெதியின் வடிவாம்
எதிகொண்ட ஈசன் எழில்வடி வாமே' (1653)

என்பது திருமந்திரம். இதில் எதி என்பது எரி என்னும் உருவில் இருக்கின்றது. இருந்தும் எவரையும் எரிக்காமல் இருப்பதே எதியின் அருட் குளிர்ச்சியை உணர்த்தும். எதியைக் கொண்ட சாக்கி எதியின் வடிவாம். எதியோ தான் கொண்ட ஈசன் அதாவது ஈசனைக் கொண்ட எதி ஈசனது எழில் வடிவாம். அடியரை ஈசனாக வழிபடலாம். ஈசனை அடியனாக வழிபடல் தீராக் குற்றம் தரும். விநாயகர், முருகர் முதலிய எல்லாரையும் சிவனாகத் தொழலாம். சிவனை வேறு எக்கடவுளாயும் தொழுதல் நரகிற்றள்ளும் எதியை ஈசனாகக் கோடலாகாது. ஈசனது வடிவாக உணர்ந்து, அவ்வடிவில் ஈசனை வழிபடல் வேண்டும். அஃது ஈசனை ஈசனாகவே உணர்ந்து வழிபடுவதாகும். எதியின் வடிவில் நின்று அருள்வோன், ஈசனே. எதிகொண்ட சாக்கி எதியின் வடிவாம் என்றதன் கருத்து இதுவே. சாக்கி எதியைக் கொண்டதால் எதி வடிவாவன். எதி, தன்னாற் கொள்ளப்பட்ட ஈசனது எழில் வடிவாவன். எதிவடிவம் சாக்கி. ஈசன் வடிவம் எதி இவ்விரண்டும் வடிவம் பற்றிய உண்மை. எதி வடிவிலும் சாக்கியே வழிபடப்பெறும் பொருள். ஈசன் வடிவிலும் சாக்கியே (ஈசனே) வழிபடப்பெறும் பொருள்.

எவரேனுந்தாம் ஆக, இலாடத்திட்ட
　　திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்டபோது
　　உகந்தடிமைத் திறம் நினைந்தங்குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
　　யிரண்டாட்டா தொழிந்து ஈசன்றிறமே பேணிக்
கவராதே தொழும் அடியார் நெஞ்சி னுள்ளே
　　கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே,

'ஆறணி செஞ்சடையண்ணல் இவர் என்று வேறணிவார்க்கு வினை இல்லை' (1862)

இவர் (எதியர்) தேவர் அவர் (ஈசர்) தேவர் என்று இரண்டுபடப் பேசாது ஈரிடத்தும் ஈசன் திறமே பேணிக் கவராதே தொழும் அடியார் நெஞ்சினுள்ளே சிவனைக் காணலாம் என்ற வாய்மையை ஊன்றியுணர்தல் வேண்டும். அடியார் நெஞ்சினுள்ளே ஈசனைக் காணலாம் என்றதால், அடியார் வணக்கமும் ஈசுர வணக்கமும் வேறு என்று தோன்றினும், உண்மையில் வணக்கத்துக்குரிய பொருளாயிருந்து, அவ்வணக்கத்தை ஏற்றருள்வோன் ஈசனே. வடிவு வேறுபட்டாலும் வணக்கம் ஓரிடத்தையே சேர்கின்றது.

'சிவனே சிவஞானி' (1580) 'குருவே சிவம்' (1581) 'ஞானிபகலூண்' (1860) 'நீறிடுந்தொண்டர்' (1861) 'நீறிடுவாரடியார்' (1862) 'அழிதகவில்லா அரனடியார்' (1864) 'வித்தகமாகிய வேடத்தர்' (1866) 'சித்தந் தெளிந்தவர்' (1866) என நடமாடக் கோயில் நம்மர் திறம் வெவ்வேறு கூறும் திருமந்திரங்களை நன்காய்ந்து வேறுபாடுணர்ந்து வழிபாடு முதலியன செய்து, பயன் நோக்காராயினும் இயல்பாக எதிராகும் நலங்களைத் துய்க்கும் புண்ணியம் கிடைக்குமோ? "மாத்திரை ஒன்றினில் மன்னி அமர்ந்துறை ஆத்தனுக்கு அருட்பொருள் ஈந்தால் அவ்வீகை மும்மூர்த்திக்கும் மூவெழு குரு பரம்பரைக்கும் தீர்த்தம் ஆம். (1852). எதியின் பெருமை இவ்வளவும் எனக்கொள்ளற்க. எண்ணிலடங்காப் பெருமையர் எதியர். அவரை எரியாக்கி

சதிகொண்ட சாக்கி யெரியின் வடிவாம்
எரிகொண்ட ஈசன் எழில்வடிவாமே. (1653) என்றுள்ள பாடம்

இவ்வளவு உண்மையையும் கெடுத்தொழிக்கும் அன்றே?

சமயபோதனை

பாடம் 4 | வினக்கள் | ஜூலை 1974.

வினக்கள் இந்த இதழ்க் கட்டுரைகள் பற்றியனவே ஆகும். விடைகளை முழு அளவு (Foolscape size) இரண்டு தனித் தாள்களில் நான்கு பக்கத்திற்குள் எழுதி இச்செயலகத்திற்கு 31-7-1974க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும். சந்தா எண், பெயர், வயது, முகவரி இவற்றைத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

மதிப்பெண் சமம்] [மதிப்பெண் 100

1. சிவபிரானுக்குத் திருநீலகண்டம் என்ற பெயர் வழங்கக் காரணம் யாது?
2. சிவபிரான் நஞ்சுண்ட செயலைப் புறநானூற்றுப் பாடல் எங்ஙனம் சிறப்பித்துக் கூறுகிறது?
3. பொருளியல் மெய்மை, அமைப்பியல் மெய்மை-இவற்றைச் சில எடுத்துக்காட்டுகளால் விளக்கவும்.
4. இறையடியார்களில் சாதி உயர்வு-தாழ்வு இல்லை என்பதை எந்நிகழ்ச்சியால் மக்கள் உணர்ந்தனர்?
5. எதியின் பெருமைகள் யாவை?
6. இராமாநுசரை நஞ்சிட்டுக் கொல்லத் தந்நலமிகள் ஏன் சூழ்ச்சி செய்தனர்? அவர்களின் சூழ்ச்சித் திட்டம் எம்முறையில் செயற்படுத்தப்பட்டது?
7. தனியடியார்களில் பிரமசரியத்தும், துறவறத்தும் நின்றவர்கள் யார் யார்?
8. சேக்கிழார் புராணத்தின் பகுப்பு முறைபற்றி எழுதுக.
9. பிறவாப் பெருநெறி பெற்றுய்ந்தவர் யார்? அவர் அடியார்களிடம் கொண்டிருந்த பத்திமைச் சிறப்பை விளக்குக.
10. 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி'யைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.

விடைகளை எழுதி உரிய அஞ்சல்தலை யொட்டிக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும் :—

"அருளோசை"

தமிழ்நாடு தெய்விகப் பேரவை

9, மகாராஜா சூரியராவ் சாலை,

ஆள்வார்பேட்டை,

சென்னை-600018.

சிவனடியார் வரலாறு

புகழ்ச் சோழர்

—:o:—

சோழ நாட்டில் சிறப்புற்று விளங்கிய உறையூரில் நீதி தவருது ஆண்டு வந்த அரசர் புகழ்ச் சோழர். அவர் அடியார் பணியும் ஆலயப் பணியும் செய்து உயர்புகழ் பெற்றவர். ஒரு சமயம் சிவகாமி ஆண்டாரின் பூக்குடலையைப் பறித்துப் பூக்களைச் சிதறியது அவரது பட்டத்து யானை. அருகில் நின்ற எறிபத்த நாயனுர் ஓடோடியும் வந்து யானையின் துதிக்கையை மழுவால் வெட்டினுர். யானை அலறி வீழ்ந்து உயிர் துறந்தது. "பட்டத்து யானையைக் கொன்றனர்! பாகரும் பட்டார்!" என்று சிலர் ஓடிச்சென்று அரசனிடம் தெரிவிக்கவே அவரும் விரைந்து வந்து யானை வீழ்ந்த இடத்தில் பார்க்க, 'பகைவரைக் காணுர்; எதிர் ஒரு மெய்யடியார் நிற்கக் கண்டார்.' "என்னுடைய யானை சிவ அபராதஞ் செய்தமையால் என்னையுங் கொன்றருளும்!" என்று உடைவாளை உருவி எறிபத்தர் கையில் கொடுத்தனர் புகழ்ச்சோழர்! எதுவும் இடையூறு நேராவண்ணம் எம்பெருமான் காத்தருளினுன்.

சிற்றரசர் திறைகொணர நெறிமுறையே ஆண்டு வந்த புகழ்ச் சோழர், அளந்த திறைமுறை கொணராதிருந்த அதிகன் என்பானுடன் போரிட நேர்ந்தது. அங்கே அற்று விழுந்த பகைவர் தலைக்குவியலில் நடுவே ஒரு தலையில் புன்சடை யிருக்கக் கண்டு உளம் நடுங்கினுர். "திருநீற்றின் நெறிபுரந்து யான் அரசளித்தபடி சால அழகிது! பார்தாங்க இருந்தேனே? பழிதாங்குவேன்!" என்று பலவாறு புலம்பினுர். அருமைத் திருமகனுக்கு முடிசூட்ட அமைச்சருக்கு ஆணை தந்து அரசைத் துறந்தார். அச்சடைத் தலையினை ஒரு பொன் தட்டில் ஏந்தி தலையில் தாங்கி (அக்கினி) அழல் வளர்த்து வலம் வந்து அஞ்செழுத்தை ஓதி அதனுட் புகுந்தார் பேரரசர்.

> கண்டசடைச் சிரத்தினையோர் கனகமணிக் கலத்தேந்திக்
> கொண்டுதிரு முடித்தாங்கிக் குலவுமெரி வலங்கொள்வார்
> அண்டர்பிரான் திருநாமத் தஞ்செழுத்து மெடுத்தோதி
> மண்டுதழற் பிழம்பினிடை மகிழ்ந்தருளி யுள்புக்கார்.

விண்ணவர்கள் பூமாரி பெய்தனர். மங்கலவாத்தியங்கள் விசும்பிடை முழங்கின. இனிப் பிறவா நெறி பெற்றுய்ந்தார்.

தமிழ்ச்செல்வர்,
ரா. சு. இராமலிங்கம்.

ஆனந்த ஆண்டு ஆடித் திங்கள் 26-ஆம் நாள் (11-8-74) ஞாயிறு புகழ்ச்சோழர் திருநட்சத்திரம்-கார்த்திகை.

உ

திருச்சிற்றம்பலம்

திருவருட்பா

சிறுநெறிக் குழைத்தான் இழுத்தது ஓர்கொடிய
    தீ மன மாயையைக் கணத்தே
வெறுவிய தாக்கித் தடுத்தெனை ஆண்ட
    மெய்ய! நின் கருணைஎன் புகல்வேன்!
உறுநறுந் தேனும் அமுதும்மென் கரும்பில்
    உற்றசா றும்அட்டசர்க் கரையும்
நறுநெயும் கலந்த சுவைப்பெரும் பழமே!
    ஞானமன் றோங்கும்என் நட்பே!

—திருவருட்பிரகாச வள்ளலார்

திருச்சிற்றம்பலம்

Edited, Printed at Peravai Achakam and Published by A. Narayanaswamy, B. A., for the Tamil Nadu Deivika Peravai at No. 9, Maharaja Surya Rao Road, Alwarpet, Madras-600018.